சேசுவின் இராச்சியம் வரும்படியாக மாதாவின் இராச்சியம் வருக!
- அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட்



"நீயாவது எனக்கு ஆறுதலளிக்க முயற்சி எடு."

மாதா பரிகார மலர்

ஜூலை & ஆகஸ்ட் 2025
மலர் 46 இதழ் 7 & 8
வருடச் சந்தா ரூ. 150.00
தனிப்பிரதி ரூ.25.00



ஜெபம் - தவம் - பரிகாரம்



பாப்பரசர் 14ஆம் சிங்கராயர்


"Annuntio vobis gaudium magnum: Habemus Papam!"

“மாபெரும் மகிழ்ச்சியூட்டும் செய்தியை உங்களுக்கு
அறிவிக்கிறேன். நமக்கு ஒரு பாப்பரசர் தரப்பட்டிருக்கிறார்.”

நம் பாப்பரசருக்காக தினமும் வேண்டிக்கொள்வோம்!

நம் புதிய பாப்பரசர் எதிர்கொள்ளவிருக்கும் சவால்கள்!

2025, மே 11 அன்று அர்ச். பத்தாம் பத்திநாதர் சபைக் குருவான சங். சுவாமி கோமிஸ் ஆற்றிய பிரசங்கம்.



முதலில் புதிய பாப்பரசரான பதினான்காம் சிங்கராயர் என்னும் பரிசுத்த பிதாவை நமக்குத் தந்ததற்காக மிகுந்த அக்களிப்போடு நாம் சர்வேசுரனுக்கு நன்றி செலுத்துவோமாக. அவர் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் இஸ்பிரீத்துசாந்துவானவரே ஏவித் தூண்டுமாறும், தாம் தீர்க்க வேண்டியிருக்கிற மகா பெரிய பிரச்சினைகளை எதிர்கொள்ள அவருக்குத் தேவையான வரப்பிரசாதத்தைக் கடவுள் அவருக்குத் தந்தருளும்படியாகவும், நம் திவ்ய பலிபூசைகளிலும், அனுதின ஜெபமாலைகளிலும் விசேஷமாய் அவருக்காக வேண்டிக்கொள்வோமாக.

உலக சமாதானம், சில நாடுகளில் தொடர்ந்து நிகழ்ந்துகொண் டிருக்கும் வேத கலாபனைகள், கவலை தருகிற வத்திக்கானின் நிதி நிலை போன்ற பல பிரச்சினைகளைக் கத்தோலிக்க செய்தித் தாள்கள் சுட்டிக் காட்டுகின்றன. ஆனால் நம் புதிய பாப்பரசரின் முக்கியப் பிரச்சினை இவற்றில் எதுவுமில்லை. அதை நன்கு புரிந்துகொள்வதற்கு, இத்தாலியிலுள்ள சாத்தானின் இரகசிய சபையின் தலைமை விடுதியின் தலைவனாக இருக்கிற லூசியானோ ரொமோலி, பாப்பு பிரான்சிஸ் இறந்தவுடன், ஏப்ரல் 22 அன்று கூறிய வார்த்தைகளைப் பார்ப்போம்: "இந்தத் துயரமான நேரத்தில், நமது ஃப்ரீமேசன் சபை பாப்புவாயிருந்த பிரான்சிஸுக்குத் தனது வணக்கத்தைச் செலுத்த விரும்புகிறது. அவருடைய பணி நம் சபையின் கொள்கைகளோடு ஆழமான முறையில் ஒன்றித்திருந்தது. . . பிரான்சிஸின் அமைதிப் புரட்சி பற்றி நாம் அகமகிழ்கிறோம்" என்றான் அவன்.

ஃப்ரீமேசன்ரியுடனான பிரான்சிஸின் ஆழ்ந்த ஒன்றிப்பு, அவருடைய அமைதிப் புரட்சி - (கத்தோலிக்க வேதத்திற்கு எதிரான) கலகம் - இதுதான் நம் புதிய பாப்பரசரின் முக்கியமான சவாலாக இருக்கிறது. ஏனெனில் ஒரு பாப்பரசர் சாத்தானின் இரகசிய சபைக் கொள்கைகளுக்கு ஆதரவாகச் செயல்பட்டு வந்தார் என்றும், இன்னும் மோசமாக, அவர் ஒரு அமைதியான கலகத்தில் ஈடுபட்டிருந்தார் என்றும் திருச்சபையின் எதிரிகளே ஒத்துக்கொள்வது, உண்மையாகவே மிகுந்த முக்கியத்துவமுள்ளதாக இருக்கிறது.

இந்தக் கலகம் கிறீஸ்தவ ஒழுங்கிற்கு எதிரானது. நாம் வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது, இந்தக் கலகம் மூன்று வெவ்வேறு வகைகளில் கிறீஸ்தவ ஒழுங்கைத் தாக்கி வந்துள்ளதைக் காண் கிறோம். இனி, கிறீஸ்தவ ஒழுங்கு என்பதென்ன? **ஒரே சர்வேசுரன், ஒரே மத்தியஸ்தராகிய நம் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துநாதர், அவருடைய ஒரே திருச்சபை** - இது தான் கிறீஸ்தவ ஒழுங்கு.

கடவுள் தமது திருச்சுதனும், நம் ஆண்டவரும், மனுக்குலத்திற்கும், கடவுளுக்குமிடையே ஒரே மத்தியஸ்தருமாகிய கிறீஸ்துநாதரின் வழியாக மனுக்குலத்தை இரட்சணியத்திற்கு அழைத்துக் கொண்டிருக்கிறார். இந்த ஒரே மத்தியஸ்தர், தமது ஒரே திருச்சபையாகிய கத்தோலிக்கத் திருச் சபையின் வழியாகத் தமது இரட்சணிய வரப்பிரசாதத்தைத் தந்தருளுகிறார்.

ஆகவே, கிறீஸ்தவ ஒழுங்கிற்கு எதிரான கலகம் என்பது, அதன் முக்கிய அம்சங்களாகிய திருச் சபை, இரட்சகர், சர்வேசுரன் என்னும் மூன்று காரியங்களையும் தாக்குவதாக இருக்கிறது. இதில்

நம் கவனத்தை ஈர்க்கும் ஒரு காரியம் உள்ளது. நாம் வரலாற்றை ஊன்றிக் கவனித்தால், இந்தக் கலகத்தின் மூன்று முன்னோக்கிய அடிகளை, மூன்று வெவ்வேறு ஆண்டுகளில் நாம் காண்கிறோம்.

முதல் படி, **1517:** மார்ட்டின் லூத்தர் தனது ஆய்வறிக்கையை, இறுதியில், ப்ரொட்டஸ்டாண்ட் பிரிவினைவாதத்தின் அடிப்படைகளாக மாற இருந்த தப்பறைகளை வெளியிட்டான். அதுவே கலகத்தின் முதல் படியாக இருந்தது. அவன் செய்தது, கடவுளால், நம் ஆண்டவராகிய சேசுக் கிறீஸ்துநாதரால், மனுக்குலத்தின் இரட்சணியத்திற்காக ஸ்தாபிக்கப்பட்ட ஒரே திருச்சபைக்கு எதிரான கலகமாக இருந்தது. மூன்று வகைகளில் ஏக பரிசுத்த திருச்சபையைத் தாக்குவதன் மூலம் இதை அவன் செய்தான். முதலாவதாக, சுதந்திரமான தனி மனித ஏவுதல் என்னும் கொள்கையைக் கொண்டு அவன் விசுவாசத்தின் ஏகத்துவத்தைத் தாக்கினான்.

லூத்தரின் முதல் பதிதக் கொள்கை: "திருச்சபையின் வழியாகக் கடவுளால் மக்களுக்குத் தரப் பட்ட போதனை எதுவுமில்லை. இஸ்பிரீத்துசாந்து நேரடியாக ஒவ்வொரு கிறீஸ்தவனையும் ஏவித் தூண்டுகிறார். இஸ்பிரீத்துவானவரின் இந்த நேரடி ஏவுதலால், ஒவ்வொரு விசுவாசியும் பரிசுத்த வேதாகமத்தை முழுவதுமாகப் புரிந்து கொள்கிறான், அதை எப்படி விளக்கிக் கூறுவது என்றும் அறிந்திருக்கிறான்." இது விசுவாசத்தின் ஏகத்துவத்தை அழிக்கும் பதிதமாகும். ஏனெனில் ஒவ்வொருவனும் வெவ்வேறு ஏவுதலைப் பெறுகிறான் என்பதால், ஒன்றுக்கொன்று முரண்பட்ட, ஏராளமான விசுவாசங்கள் தோன்றுகின்றன!

அடுத்த பதிதக் கொள்கை, நிர்வாக ஐக்கியம் மறுதலிக்கபடுதல், திருச்சபையிலுள்ள அதிகாரக் குருத்துவப் படிநிலை அவனால் மறுக்கப்பட்டது. குருத்துவம் என்று ஏதுமில்லை. கிறீஸ்தவர்கள் அனைவரும் சமம். அதிகாரம் என்று எதுவுமில்லை. குருக்களும், மேற்றிராணிமாரும் மக்கள் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கும்படி மக்களிடையே இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிற மற்றவர் களைப் போல சாதாரண மனிதர்கள்தான். அவர்கள் திருச்சபையில் ஒரு வகையான வேலைக் காரர்களே. இந்தப் பதித போதனை திருச்சபையிலுள்ள நிர்வாக ஐக்கியத்தை அழிக்கிறது.

இறுதியாக, வழிபாட்டு ஐக்கியம். திருச்சபையிலுள்ள ஐக்கியம் மூவகைப்பட்டது. அவை: விசுவாச ஐக்கியம், நிர்வாக ஐக்கியம், வழிபாட்டு ஐக்கியம் ஆகியவையாகும். வழிபாட்டு ஐக்கியம் திவ்ய பலிபூசையை அழிக்க லூத்தர் செய்த முயற்சியின் மூலம் தாக்கப்பட்டது. லூத்தர் திவ்ய பலிபூசையை மறுதலித்தான். அவன் தனக்கும், பசாசுக்கும் இடையில் நடந்த ஓர் உரை யாடலைப் பற்றியும் எழுதி வைத்தான். அதில், திவ்ய பலி பூசையை அழிப்பதன் மூலம் அவன் எப்படித் திருச்சபையை அழிக்க முடியும் என்று பசாசு அவனுக்கு அறிவுரை கூறியது. ஆகவே, **1517**ல், **விசுவாச ஐக்கியத்தையும், நிர்வாக ஐக்கியத்தையும், வழிபாட்டு ஐக்கியத்தையும்** தாக்கியதன் மூலம், கடவுளால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரே திருச்சபை தாக்கப்பட்டது.

அடுத்து, **1717. 200** ஆண்டுகளுக்குப் பிறகு, லண்டனில் ஃப்ரீமேசன்ரி என்னும் இரகசிய சபை ஸ்தாபிக்கப்பட்டது. இது இந்தச் சபையின் தொடக்கமல்ல, குறைந்த பட்சம் இந்த இரகசிய சபையின் விடுதலை இறையியல் வெளிப்படுத்தப்பட்ட ஆண்டு மட்டுமே. இது கிறீஸ்தவ ஒழுங்கிற்கு எதிரான கலகத்தின் இரண்டாவது படியாக இருந்தது.

இது விடுதலை இறையியலின் மூலம் நம் ஆண்டவராகிய ஒரே இரட்சகருக்கு எதிரான இரண் டாவது படியாக இருந்தது. விடுதலை இறையியல் என்பது சுதந்திரத்தை மட்டுமே முழுமையான கொள்கையாக ஏற்றுக்கொள்வதாகும். சுதந்திரம், விடுதலை, மனிதன் எல்லாவற்றிடமிருந்தும் சுதந்திரமுள்ளவன். அவன் யாருக்கும் பதில் சொல்ல வேண்டியதில்லை. அவன் சிந்திக்க விரும்பு வதைச் சிந்திக்கவும், செய்ய விரும்புவதைச் செய்யவும் உரிமையுள்ளவன், அவன் சுதந்திர மானவன். யாருக்கும் கட்டுப்பட அவசியமில்லாதவன். அவனுடைய சுதந்திரம் பரிபூரண மானது. இதன் காரணமாக, இரண்டு விளைவுகள் தோன்றுகின்றன. முதலாவது, இயற்கைவாதம்.

இயற்கைவாதம் என்பது சுபாவத்திற்கு மேலான எல்லா ஒழுங்கும் மறுதலிக்கப்படுவதாகும். நான் சுதந்திரமானவன் என்றால், நானே அனைத்திற்கும் மையம் என்றால், இல்லாத ஒரு சுபாவத் திற்கு மேலான வெளிப்பாட்டின் வழியாக, என் மீது சுமத்தப்படுகிற ஓர் வெளியரங்க உண்மைக்கு வாய்ப்பேயில்லை. நான் என் சாராம்சத்தில் நல்லவனாக இருக்கிறேன். மனுக்குலம் நல்லது. ஜென்மப் பாவமில்லை, பலவீனமில்லை, துர்க்குணம் இல்லை. இதன் விளைவு, கீழ்ப்படியாமை, ஆங்காரம், பன்முக அதிகாரம். ஏனெனில், தனித்தனியே சிந்திக்கவும், செயல்படவும் ஒவ்வொரு வனுக்கும் அதிகாரம் உண்டென்றால், ஒன்றுக்கொன்று எதிரான சிந்தனைகளும் கூட நல்லவையே. உதாரணமாக, பிறர்சிநேகமும் நல்லது, கொலையும் நல்லது! முழுமையான சத்தியம் என்று எதுவு மில்லை. எல்லாமே நல்லது. கட்டுப்படுத்தும் விதி எதுவும் இல்லை. முடிவு: எல்லாமே தவறானது. இதுவே இரண்டாவது படி. நம் ஆண்டவரையும், அவருடைய சுபாவத்திற்கு மேலான பரிசுத்த வேதத்தையும் மறுதலிக்கும் செயல்.

இறுதியாக, மூன்றாவது படி, **1917**, கம்யூனிசம். ஒரே உண்மையான இரட்சகரையும், ஒரே சத்தியத் திருச்சபையையும் மறுதலித்தபின், கம்யூனிசமே கலகத்தின் இறுதிப்படியாக இருக்கிறது. இப்போது கடவுளையே மனிதன் மறுதலிக்கிறான். இனி கடவுள் என்று யாரும் இல்லை.

கம்யூனிசம் கடவுளையும், சுபாவத்திற்கு மேலான எதையும், ஞான ரீதியான எந்த ஒரு நிதர் சனத்தையும் கூட மறுதலிக்கிறது. எல்லாமே சடப்பொருண்மை மட்டும்தான். ஞானத் தன்மை கொண்டது எதுவுமில்லை. இதன் விளைவு முழுமையான உலகாதாயம், விஷமுள்ள ஒரு மதம், மக்களைப் போதையிலேயே வைத்திருக்கும் ஒரு போதைப் பொருள். இது வகுப்புவாதப் போராட்டத்தைக் கொண்டு மனுக்குலம் முழுவதையும், சிநேகத்தையும் அழிப்பதற்கான அடித்தளமாக இருக்கும். இது கிறீஸ்தவ ஒழுங்கை முழுமையாக அழித்து விடும்.

ஆக, **1517**ல், திருச்சபைக்கும், **1717**ல் நம் ஆண்டவருக்கும், அவரது பரிசுத்த வேதத்திற்கும், **1917**ல் கடவுளுக்கும் எதிரான கலகத்தின் மூன்று படிக்கட்டுகளை நாம் காண்கிறோம். தொடக் கத்தில் லூசியானோ ரொமோலி கூறியதாக நாம் கூறிய பிரான்சிஸின் "கலகம்" இதுதான்.

இந்தக் கலகம் செய்தவர் பிரான்சிஸ் மட்டுமல்ல, இரண்டாம் வத்திக்கான் சங்க காலம் தொடங்கி, அவர் வரை இருந்து வந்த பாப்பரசர்களும் (முதல் அருள் சின்னப்பர் நீங்கலாக) இதே அமைதிப் புரட்சியான கொடூரக் கலகத்தில் ஈடுபட்டிருந்தவர்கள்தான். இவர்களும் ஃப்ரீமேசன்ரி யின் கொள்கைகளோடு ஆழ்ந்த விதமாக ஐக்கியமாயிருந்தார்கள். நாம் திருச்சபையில் நிகழ்ந்துகொண்டிருப்பதைக் கவனித்தால், இது உண்மைதான் என்று ஒத்துக்கொள்வோம்.

கலகத்தின் முதல் படி ஏக பரிசுத்த, சத்தியத் திருச்சபைக்கு எதிரான ப்ரொட்டஸ்டாண்ட் பதிதமாகும். திருச்சபையின் அதிகாரிகள் ப்ரொட்டஸ்டாண்ட் பதிதத்தை எப்படி ஏற்றுக்கொண் டார்கள், அதற்கு ஏற்றபடி எப்படிக் கத்தோலிக்கக் கொள்கைகளை மாற்றியமைத்தார்கள். சினோடாலிட்டி வழியாக. (Synodality என்பது, ஆயர்கள், குருக்கள், துறவிகள், பொதுநிலையினர் அனைவரும் ஒன்றாக, ஒரே அதிகாரத்தோடு, ஒன்றிணைந்து செயல்படுகிற இறைமக்கள் கூட்டமாகும்.) இது மூவகை ஒழுங்கையும், திருச்சபையின் ஐக்கியத்தையும், விசுவாச ஐக்கியத்தையும் அழிக்கும் காரியமாக இருக்கிறது.

இந்தப் பதிதக் கொள்கையின்படி, பரிசுத்த ஆவியானவர் இன்றைய திருச்சபை எதை விசுவசிக்க வேண்டும் என்று அதனிடம் கூறும்படி, மக்களிடம் நேரடியாகப் பேசி அவர்களைத் தூண்டுகிறார். இது அர்ச். பத்தாம் பத்திநாதரால் கண்டனம் செய்யப்பட்ட நவீனவாதம். ஆனால் மிகச் சரியாக இதைத்தான், மக்களின் இந்த வேதசாஸ்திரத்தைத்தான் அவர்கள் போதிக்கிறார்கள்.

நிர்வாக ஐக்கியச் சிதைவின் மூலம், பாப்புத்துவ-மேற்றிராணித்துவ சமத்துவத்தின் மூலம் திருச் சபையின் முதன்மை அதிகாரம் கலைக்கப்படுகிறது. இதுவும் சினோடாலிட்டியின் ஒரு

பாகம்தான். பாப்பரசரோ, மேற்றிராணியாரோ, குருவோ, ஏன் விசுவாசியோ கூட திருச்சபையின் அதிகாரத்தைச் செயல்படுத்தக் கூடாது என்று அவர்கள் விரும்புகிறார்கள்.

உலகெங்கும் பாப்பரசரின் அதிகாரத்திற்கு எதிரான ஆயர் சங்கங்கள், குருக்கள் மாநாடுகள் நடக்கின்றன. இவற்றின் மூலம் உரோமை ஆயர் சங்கங்களால் வெளிப்படையாக எதிர்க்கப் படுகிறது. திருச்சபையின் ஒற்றுமை பற்றி அவர்களுக்குக் கவலையில்லை.

இறுதியாக வழிபாட்டு ஐக்கியம் அழிக்கப்படுதல். இதற்காக அவர்கள் எடுத்த முதல் நடவடிக்கை பயங்கரமானது. அதுவே புதிய பூசை! அது பூசையைப் ப்ரொட்டஸ்டாண்ட்களும் ஏற்றுக் கொள்ளச் செய்யும் முயற்சி. புதுப்பூசையை அமல்படுத்திய "பொதுப் போதனை" மடலை நீங்கள் வாசிக் கும்போது, படைப்பாற்றல் புதுப் பூசையின் முக்கிய அம்சங்களில் ஒன்றாயிருப்பதைக் காண் பீர்கள். பூசை வைக்கும் குரு சொந்தமாக ஜெபம் சொல்பவராக, தமக்கே உரிய புதிய வழிகளில், தம் இஷ்டத்துக்கு வழிபாடு நடத்துபவராக இருக்க அவர்கள் அவரை ஊக்குவிக்கிறார்கள்.

இன்று திருச்சபையில் இயற்கைவாதம், பல தெய்வ விசுவாசம், கண்டிப்பில்லாத தளர்வு நிலை ஆகியவற்றை வெளிப்படையாகவே நாம் காண்கிறோம். மனுக்குலம் நல்லது, ஜென்மப் பாவம் என்பது இல்லை என்று போதிக்கும் இயற்கைவாதத்தின்படி நரகம் இல்லை, பாவம் இல்லை, எல்லாரும் நல்லவர்களே! எல்லோரும் தேவ இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் இருக்கிறார்கள். அதை நாம் இழக்க முடியாது, நாம் என்ன குற்றத்தைச் செய்தாலும், எப்போதும் இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் இருப்பதால், நாம் நரகத்திற்குப் போக முடியாது, அதற்கு சாத்தியமேயில்லை!

முந்திய 'திருத்தந்தை' "எல்லா மதங்களும் கடவுளிடம் மனிதர்களை இட்டுச் செல்கின்றன" என்றார். இது பல தெய்வ விசுவாசத்திற்கு ஒரு மிகச் சிறந்த உதாரணம். இதையே அவர் எழுபது வருடங்களுக்கு முன் சொல்லியிருந்தால், திருச்சபையால் கண்டனம் செய்யப்பட்டிருப்பார்! திருச்சபை முழுவதும் இதற்கு எதிராயிருந்து வந்திருக்கிறது. இது முற்றிலும் ஃப்ரீமேசன் சபை சார்ந்த பல தெய்வ விசுவாசக் கொள்கையாகும். இறுதியில், போதனை முக்கியமில்லை, சத்தியங்கள் முக்கியமில்லை, நீ விரும்புவதை, உனக்கு மகிழ்ச்சி தருவதை நீ விசுவசிக்கலாம். கடவுள் இந்த எல்லாக் காரியங்களுக்கும் மேலானவர்.

வத்திக்கானில் நடந்த பச்சமாமா வழிபாடு, அஞ்ஞான வழிபாடுகள் எல்லாவற்றிற்குமே இதுதான் காரணம். பன்முக விசுவாசத்தின் வழியாக மட்டுமே இது சாத்தியம். அவர்கள் ஃப்ரீமேசன்களின் விடுதலை இறையியலை முழுவதுமாகக் கிரகித்துக்கொண்டு விட்டார்கள்.

இனி, கடைசிப் படி. விதிமுறைத் தளர்வுகள், பிறர்சிநேகத்தின் பெயரால் சட்டங்கள் திருத்தப் படுதல், உதாரணமாக, சாவான பாவத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிற ஓரினச் சேர்க்கையாளர் களுக்கும், விவாகரத்துச் செய்தவர்களுக்கும் திவ்ய நற்கருணை வழங்கப்பட வேண்டும் என்ற சட்டம்.

கம்யூனிசம் சீனா போன்ற நாடுகளில் இன்னும் உயிரோடு இருக்கிறது என்றாலும், மேலை நாடுகளில் அது தனது முகத்தை மாற்றிக்கொண்டுள்ளது. அது சிவப்பாக இருந்த தனது நிறத்தைப் பச்சையாக மாற்றிக்கொண்டுள்ளது. அவர்கள் சுற்றுச் சூழல் வல்லுனர்களாகத் தங்களைக் காட்டிக்கொள்கிறார்கள். ஆனால் நீங்கள் சற்று கவனமாகப் பார்த்தால் அவர்கள் முன்பு கம்யூனிஸ்ட்களாக இருந்தவர்கள் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

அவர்கள்தான் முன்பு நாத்திகர்களாக இருந்து, கம்யூனிசத்தை வளர்த்தார்கள், திடீரென அவர்கள் பசுமையாக மாறி விட்டார்கள். ஏன்? ஏனெனில் சுற்றுச்சூழலியல் தன்னிலேயே நாத்திகத் தன்மையும், உலகாதாயத் தன்மை கொண்டதாகவும், பூமியையும், இயற்கையையும் நோக்கிய ஓர் உலகத்தன்மையான ஆன்மீகத்தின் வழியாகக் கடவுளையும், எந்த ஓர் உண்மையான ஆன்மீகத்தையும் அவர்களுடைய இடத்திலிருந்து அகற்றி விட முயல்வதாகவும் இருக்கிறது.

பூமியின்மீது அக்கறை காட்டுவது நல்ல விஷயம்தானே என்று நீங்கள் சொல்லலாம். படைப் பின்மீது அக்கறை கொள்வது நல்லதுதான். ஆனால் நாம் படைப்பை வழிபடுவதில்லை. நாம் கடவுளை வழிபடுகிறோம். பூமித் தாயை நாம் வழிபடக் கூடாது. பூமித் தாயிடம் அல்ல, சர்வேசுரனுடைய தாயாராகிய மாமரியிடமே நாம் ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இது திருச்சபையில் நிகழ்ந்து வரும் கலகச் சூழ்நிலையின் சிறு சுருக்கமாகும். கடந்த அறுபது ஆண்டுகளாக, அவர்கள் தங்கள் கலகத்தில் இந்த மூன்று படிகளையும் அமல்படுத்தி வந்துள்ளதை நாம் கண்டோம். ஏக, பரிசுத்த, கத்தோலிக்கத் திருச்சபையின் ஐக்கியத்திற்கு எதிராக, சினோடா லிட்டி வழியாக அவர்கள் செயல்பட்டார்கள். ஒரே உண்மையான இரட்சகருக்கு எதிராக ஃப்ரீமேசன்ரி சார்ந்த விடுதலையியல் வழியாகச் செயல்பட்டார்கள். இறுதியாக, ஒரே உண்மையான சர்வேசுர னுக்கு எதிராக, சுற்றுச் சூழலியல் என்னும் இந்த மறைவான கம்யூனிசத்தின் வழியாக.

ஆகவே, இதன் முடிவு என்ன? இதுதான் நம்முடைய புதிய பாப்பரசரின் முக்கியமான சவால் என்பதுதான் முடிவு. திருச்சபையில் கலகத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும். இதற்கு அவருக்கு மிக அதிகமான ஆற்றல் தேவைப்படும். அது மிகக் கடினமான பணியாக இருக்கும். ஆகவே, நம் தலைமை மேய்ப்பரும், அர்ச். இராயப்பரின் ஸ்தானாதிபதியும், நம் ஆண்டவரின் பிரதிநிதியு மான நம்முடைய பரிசுத்த பாப்பரசரை நம் ஜெபங்களாலும், நம் உறுதியான விசுவாசத்தாலும் தாங்க கத்தோலிக்கர்களாகிய நாம் ஒவ்வொருவரும் கடமைப்பட்டிருக்கிறோம்.

நம் பரிசுத்த பாப்பரசர் செய்ய வேண்டிய முதல் வேலை மிக எளியது. **ஒரே சர்வேசுரன் இருக்கிறார், நம் ஆண்டவராகிய சேசுக்கிறீஸ்துவாகிய நம் ஒரே இரட்சகர் இருக்கிறார், இரட்சணியத்தின் பெட்டகமாகிய ஒரே திருச்சபையும் இருக்கிறது** என்பதை உலகத்திற்கு நினைவூட்டுவது. அவ்வளவுதான்.

தமது முதல் பிரசங்கத்தில், நாம் மகிழ்ச்சி கொள்ளும் விதமாக, இந்த மூன்று காரியங்களையும் அவர் நினைவுபடுத்தினார். தொடர்ந்து தமது பிரசங்கங்களில் இவற்றைப் பற்றி அவர் போதித் தும் வருகிறார். ஆகவே, அவருடைய பாப்புத்துவம் நமக்கு உண்மையான ஒளியாக இருக்கும் என்று நம்புவோம்.

இதுதான் அடிப்படை அவசியமான காரியம்: ஒரே சர்வேசுரன், ஒரே இரட்சகர், ஒரே திருச் சபை. இதை மட்டும் அவர் தொடங்கி விட்டால், மற்றதெல்லாம் தொடர்ந்து நிகழும்.

மனுக்குலத்தின் எல்லாப் பிரச்சினைகளுக்கும் நம்மிடம் தீர்வு உள்ளது. போர்கள், கஷ்டங்கள், வேதகலாபனைகள், நிதி நெருக்கடிகள், போன்றவை பின்னால் வருகின்றன. முதலில் வருவது, அதாவது, எல்லாவற்றிற்கும் மேலாக, பாப்பரசரிடம் முதலில் நாம் எதிர்பார்ப்பது, அவர் அர்ச். இராயப்பரோடு சேர்ந்து, **''நீர் கிறீஸ்துவானவர், சுயஞ்சீவியரான சர்வேசுரனுடைய திருச்சுதன். உம்முடைய திருமாதா சகல வரப்பிரசாதங்களின் மத்தியஸ்தியாக இருக்கிறார்கள்''** என்று கூறுவதைத்தான்.

மரியாயே வாழ்க!

கற்பைக் காப்பாற்று!

அர்ச். சாமிநாதர் மரணப் படுக்கையில் இருக்கையில் தம்மைச் சுற்றியிருந்த துறவிகளிடம், "தேவ இரக்கத்தால் என் கற்பை இதுவரை காத்திருக்கிறேன். அது கடவுளின் பெரிய கொடை. அதைப் பெற சில காரியங்களைச் செய்ய வேண்டும், விழிப்பாயிருக்க வேண்டும், ஜெபிக்க வேண்டும், பெண்களுடன் பழகுவதைத் தவிர்க்க வேண்டும், பாவ சந்தர்ப்பத்தைத் (குறிப்பாக இன்றைய நாட்களில் தொலைக்காட்சி, வலைத்தளம், அலைபேசி, பொழுதுபோக்கு ஊடகங்கள்) தவிர்க்க வேண்டும். கற்பை இழப்பது எளிது. அதைத் திரும்பப் பெறுவது மிகக் கடினம்" என்று புத்தி கூறினார்.

உண்மையான அன்பு



உண்மையான அன்பு: *அது கடவுளிடமிருந்து வருகிறது. அவருடைய தயாளம், கருணை, மன்னிப்பு, இரக்கம், (நாம் பாவம் செய்யும்போது நம்மைத் திருத்துகிற) நீதி ஆகிய எல்லாமே கடவுளுக்குச் சொந்தமானவை. மனிதன் இவற்றைக் கொண்டு வாழ வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். சர்வேசுரன் தமது பிள்ளைகளுக்கு அவர்களுடைய ஞான, சரீரத் தேவைகள் எல்லாவற்றையும் கொடுக்கிறார். தமது தேவசிநேகத்தின் உச்சமாக, அவர் தமது திருச்சுதனையே நம் பாவங்களுக்காகப் பலியாக்கி, நம்மைப் பாவத்தினின்றும், நித்திய மரணத்தினின்றும் விடுவித்தார். தம்மைப் போலவே நாமும் உத்தமர்களாயிருந்து, முடிவில் நித்தியத்திற்கும் தம்மோடு மோட்ச பேரின்பத்தில் வாழ அவர் நம்மை அழைக்கிறார்.*

உண்மையான அன்பு: *ஒவ்வொரு மனிதனும் தமது அன்பில் தானும் வாழ்ந்து, தமது அன்பிற்குப் பதிலன்பு காண்பித்து, அதே அன்பில் மற்றவர்களையும் வாழ வைக்க வேண்டுமென்பதே கடவுள் அவனுக்குத் தரும் முதன்மையான கட்டளை. தேவ கட்டளைகளை அனுசரிப்பதன் மூலம் முதலில் தான் கடவுளை நேசிக்கவும், அதன்பின் தன் அயலாரை நேசிக்கவும், அவர்கள் கடவுளை நேசிக்கத் தூண்டவும் மனிதன் கடமைப்பட்டிருக்கிறான்.*

உண்மையான அன்பு: *"உங்கள் சிநேகம் பாசாங்கற்றிருப்பதாக" என்கிற அர்ச். சின்னப்பரின் வார்த்தைகளுக்கேற்ப, மனிதன் உண்மையான இரக்கமும், அன்பும் உள்ளவனாக இருக்க வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். ஒருவரை நேசித்து, மற்றவரை வெறுக்கவும், தனக்குப் பிடிக்காதவர்களைப் பழிவாங்கவும் தூண்டும் தீய குணங்களையும், அதில் நிலையாயிருக்கும் மனிதர்களையும் ஆண்டவர் அருவருக்கிறார். உலக அதிகாரிகளிடம் நீதியை எதிர்பார்க்கிறார். திருச்சபையில் ஆயர்களோ, துறவற மடங்களின் அதிகாரிகளோ, யாராக இருந்தாலும் சரி, அவர்கள் தங்களுக்குக் கீழ்ப்பட்டவர்களின் தவறுகளைக் கண்டித்துத் திருத்தவும், பழிவாங்கும் உணர்வு இன்றி, நீதியோடும், இரக்கத்தோடும் அனைவரையும் நடத்தவும் வேண்டுமென்று ஆண்டவர் விரும்புகிறார். ஏனெனில் பழிவாங்குதல் தமக்கே உரியது என்கிறார். நீங்கள் மோட்சம் செல்ல வேண்டுமா? உங்களிடம் நீதியும் இரக்கமும் இருக்க வேண்டுமென்று கடவுள் விரும்புகிறார். தனி மனிதர்களிடம் மட்டுமல்ல, குடும்பங்களிலும், ஏன், நமது தாயாகிய திருச்சபையின் ஞான அதிகாரிகளிடமும் கடவுள் இந்தப் பரிசுத்த அன்பை எதிர்பார்க்கிறார். யாருக்கு ஞானமும், அறிவும் அதிகம் தரப்பட்டுள்ளதோ, அவர்களிடம் அதிகமான அன்பை ஆண்டவர் எதிர்பார்க்கிறார்:*

1 கொரி. 13ஆம் அதிகாரத்தில் அர்ச். சின்னப்பர் உண்மையான அன்பிற்குத் தரும் அடையாளங்கள்: "தேவசிநேகம் பொறுமையுள்ளது, தயவுள்ளது. அது பொறாமைப்படாது, துடுக்காய்ச் செய்யாது, அகங்காரப்படாது, பெருமையைத் தேடாது, சுயநலத்தை விரும்பாது, கோபங்கொள்ளாது, தீங்கு நினையாது. அநியாயத்தில் சந்தோஷப்படாமல், சத்தியத்திலே சந்தோஷப்படும். சகலத்தையும் சகிக்கும், சகலத்தையும் விசுவசிக்கும், சகலத்தையும் நம்பும், சகலத்தையும் தாங்கிக்கொள்ளும். சிநேகம் ஒருக்காலும் ஒழியாது" (1 கொரி. 13:4-8).

இந்த உண்மையான அன்பிற்கு நமதாண்டவரும், நமது தேவ அன்னையுமே நமக்கு முன் மாதிரிகைகளாயிருக்கிறார்கள். அவர்கள் நம் ஆன்ம இரட்சணியத்திற்காகத் தங்களையே பலியாக்கியிருக்கிறார்கள். அவர்களைக் கண்டுபாவித்து, தேவ/பிறர் சிநேகக் கட்டளையை அனுசரித்துப் பரலோகத்தை அடைந்துகொள்வோமாக.

மரியாயின் மீது உண்மை பக்தி!

மரியாயின் மீது உண்மை பக்தி நம்மை சேசுவிடம் அழைத்துச் செல்வதாகவும், தாழ்ச்சியில் வாழச் செய்வதாகவும் இருக்கிறது. இப்பக்தியின் வழி இலகுவானது. ஏனெனில் இதில் வரப்பிரசாதத்தின் நிறைவு உள்ளது; இஸ்பிரீத்துசாந்துவின் முத்திரையும் இதை நிரப்புகிறது. இதைப் பின்செல்லும்போது நாம் களைப்படைவதில்லை, திரும்பிச் செல்வதில்லை.



இவ்வழி கிட்டத்து வழி, குறுகிய காலத்தில் நம்மை சேசுக்கிறீஸ்துவிடம் அழைத்துச் செல்லும் வழி. இவ்வழி உத்தம மானது, சேறும், தூசியும், பாவத்தின் ஒரு சிறு கறையும் கூட இதில் இல்லை. இவ்வழி பாதுகாப்பானது: வலது பக்கமும், இடது பக்கமும் திரும்பாமல், நேராக, பாதுகாப்பாக, நம்மை நித்திய வாழ்வாகிய சேசுநாதரிடம் இட்டுச் செல்கிறது.

எனவே நாம் மரியாயின் மீது உண்மையான பக்தி கொண் டிருக்கிறோம் என்றால், அது அவர்கள் வழியாக சேசுவிடம் செல் வதற்காகவே. அவர் ஏற்படுத்திய தேவத்திரவிய அனுமானங் களை அடிக்கடி பெற நம்மைத் தூண்டுவது இந்த பக்தி.

எல்லாக் கத்தோலிக்கர்களிடமும் தேவமாதா பக்தி இருக்கிறது. ஆனால் பலர் "அவர் உங்க ளுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்" என்ற மாதாவின் உத்தரவைக் கேட்பது கூட இல்லை. அநேகர் பாதயாத்திரை செல்வார்கள், ஜெபமாலை சொல்வார்கள். ஆனால் ஆண்டுக் கணக்கில் கூட பாவசங்கீர்த்தனம் செய்யாமலும், திவ்ய நன்மை வாங்காமலும் இருப்பார்கள். மாதாவின் பெயரைச் சொல்லிக்கொண்டே சேசுவிடமிருந்து தூரமாக இருப்பார்கள். இதனால் மரியாயின் மாசற்ற இருதயம் துயரப்படுகிறது. வருடத்திற்கு ஒரு முறையாவது நல்ல பாவசங்கீர்த்தனம் செய்வது என்னும் திருச்சபைக் கட்டளையைக் கூட இவர்கள் கடைப்பிடிக்காமல் இருப்பது சேசுவைப் போலவே, மாதாவையும் வேதனைப்படுத்துகிறது. இது உண்மையான மாதா பக்தியே அல்ல.

கானாவூர்த் திருமணத்தில் இப்படி வேலையாட்களுக்கு உத்தரவிட்ட மாதா, அவ்வாறே தனது பிள்ளைகளாகிய நமக்கும் உத்தரவிடுகிறார்கள். அவர்களது பரிந்துரையால் தண்ணீர் திராட்சை இரசமாக மாற்றப்பட்டது போலவே, மாதாவின் மீது உண்மையான பக்திகொள்வதன் மூலம், இந்தப் பரிசுத்தமான அச்சில் வார்க்கப்பட்டு, நாம் சேசுவாக உருவாக வேண்டுமென்று நம் தேவ அன்னை விரும்புகிறார்கள்.

நமதன்னை மீது உண்மை பக்தி புனிதமானது, அதாவது பாவத்தை நாம் விலக்கி நடக்கச் செய்கிறது. கன்னித் தாயாரின் புண்ணியங்களைக் கண்டுபாவிக்கச் செய்கிறது; அவர்களுடைய ஆழ்ந்த தாழ்ச்சியையும், உயிருள்ள விசுவாசத்தையும், இடைவிடாத ஜெபத்தையும், யாவற்றிலும் அவர்கள் கொண்டிருந்த பரித்தியாக உணர்வையும், அவர்களது தெய்வீக மாசற்றதனத்தையும், பற்றியெரியும் நேசத்தையும், இறுதி எல்லைக்கும் சென்ற பொறுமையையும், சம்மனசுகளுக்குரிய சாந்த குணத்தையும், தெய்வீக ஞானத்தையும் நாமும் கண்டு நடக்கச் செய்கிறது.

மாதா மீது கொள்ளும் உண்மையான பக்தி சேசுவின் மீது கொள்ளும் பக்தியே; அவ்வாறே, சேசுவின்மீது கொள்ளும் பக்தி, மாதாவின் மீது கொள்ளும் உண்மையான பக்தியே.

உங்கள் பிள்ளைகளின் உலகக் கல்வி முக்கியம்: இவ்வுலகிற்கு! ஆன்ம இரட்சணியம் அதிக முக்கியமானது: மோட்சத்துக்கு!



ஏராளமான கத்தோலிக்கக் கிறீஸ்தவப் பெற்றோர் அஞ்ஞானிகளின் உணர்வோடுதான் வாழுகிறார்கள். ஆண்டவர் தங்களுக்குத் தந்த மிக முக்கியச் சொத்தாகிய பிள்ளைகளை நன்கு படிக்க வைக்கவும், தகுதியான படிப் பிற்குப் பின் ஒரு வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்க வும், அதன்பின் திருமணத்துடன் கூடிய ஒரு வளமான எதிர் காலத்தை உருவாக்கித் தரவும் மிகக் கடுமையாக உழைக் கிறார்கள். இது நியாயமே. தங்கள் அந்தஸ்தின் கடமையை நிறைவேற்றுவதில் ஒரு பகுதியான இதை அவர்கள் நன்றாகவே செய்து முடிக்கிறார்கள். கல்வியால் ஒருவரின் அறிவு வளர்கிறது, கல்வியறிவாலும், உழைப்பாலும் ஒருவரது பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கிறது. இவையெல்லாம் தேவ பராமரிப்பாலேயே நமக்குத் தரப்படுகின்றன.

ஆனால் நமக்கு ஓர் ஆன்மா உள்ளது, அதை நாம் கடவுளிடமிருந்து பெற்றிருக்கிறோம். ஞான ஸ்நானத்தால் நம் ஆன்மா ஜென்மப் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டது. புத்தி விபரம் அறிந்த பின், ஜென்மப் பாவ தோஷத்தால் நாம் மனம் பொருந்திச் செய்கிற கர்மப் பாவங்களை மன்னிக்க நம் ஆண்டவர் பாவசங்கீர்த்தனத்தை ஏற்படுத்தியிருக்கிறார். திவ்ய பலி பூசையை ஏற்படுத்தி, அதன் வழியாகத் தம்மையே திவ்ய நற்கருணையாக நமக்குத் தருகிறார். இதன் மூலம், தேவ உதவி யுடன் பாவத்தை ஜெயித்து, மோட்ச இராச்சியம் செல்ல நமக்கு வழி உண்டாக்கித் தரப்படுகிறது.

ஆனால் அநேக பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் அறிவு, சாமர்த்தியம், புத்திக்கூர்மை, கல்வித் தகுதி, உயர்ந்த பதவிகள், கராத்தே, இசை, நடனம், செஸ், நீச்சல் போன்ற திறமைகளைக் கண்டு சந்தோஷப்படுகிறார்கள். ஞாயிற்றுக்கிழமைகளிலும் கட்டாயப்படுத்தி ட்யூஷன் வகுப்புகளுக்கு அனுப்புகிறார்கள். ஆனால் தங்கள் பிள்ளைகளுக்கு ஞான உபதேச அறிவை இளவயதிலேயே முழுமையாகத் தந்து விடுவதும், அவர்களை ஜெபிக்கவும், அடிக்கடி பாவசங்கீர்த்தனம் செய்து, கடவுளிடமிருந்து பாவ மன்னிப்புப் பெறவும், ஞாயிறு பூசை கண்டு திவ்ய நன்மை வாங்கவும் தூண்டுவதும் அவர்களது ஆன்மா உயிரோடிருக்க இன்றியமையாதவை என்பது பற்றி அவர்கள் யோசிப்பதேயில்லை. இன்று பெரும்பாலான பரிதாபத்திற்குரிய பெற்றோர் வேத அறியாமைக் குள் அவர்களுடைய ஞான மேய்ப்பர்களால் மூழ்கடிக்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் பிள்ளை களின் ஆன்ம இரட்சணிய விஷயத்தில் அக்கறை இன்றியும், சொல்லப் போனால், அலட்சிய மாகவும் இருக்கிறார்கள். பாவம் பிள்ளைகள்! அவர்கள் கடவுளின் நண்பர்களாக இருப்பதற்குப் பதிலாக, அவரது எதிரிகளாக வாழ்ந்து, பாவத்தில் மரித்து, நித்திய நரகத்திற்கு முழுத் தகுதி

முன்பக்கத் தொடர்ச்சி....

எனவே, நாமாவது நம் தேவ அன்னையை உண்மையோடு நேசிக்க முன்வருவோமாக. நான் மாதா பிள்ளை என்று நாம் மார்தட்டிச் சொல்வதை விட, உண்மையான மாதா பிள்ளையின் ஆழமான உணர்வோடு, மாதா வழியாக சேசுவை ஆழமாக நேசிக்க முயல்வோமாக. நாம் மரியாயின் மீது கொண்டிருக்க வேண்டிய உண்மையான பக்தி இதுவேயாகும்.

யுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்ற எண்ணம் இவர்களிடம் இல்லை. காரணம் இவர்களிடமும் விசுவாசம் இல்லை, விளைவு, பிள்ளைகளிடமும் விசுவாசம் இல்லை. விசுவாசமும், கடவுளைப் பற்றிய போதிய அறிவும், அன்பும், தெய்வ பயமும் இல்லாததால், ஒழுக்கமும், பக்தியும், புண்ணிய வாழ்வுமின்றி வாழ்ந்து, கடைசியில் ஆண்டவரின் அன்புக்குக் கீழ்ப்பட்டிருக்காமல், சாத்தானின் கண்ணிகளில் சிக்குண்டவர்களாகவே வாழ்ந்து மரிக்கிறார்கள்.

விசுவாசமோ, பக்தியோ, தெய்வ பயமோ இன்றி வாழும் பிள்ளைகள் நன்றியற்று, பிரமாணிக்கம் கெட்டு, பெற்றோரை மதிக்கவோ, வயதான காலத்தில் அவர்களைப் பராமரிக்கவோ விரும்புவதில்லை. பெற்றோர் பிள்ளைகளாலும், மருமக்களாலும் புறக்கணிக்கப் படுகிறார்கள். வேலை வாய்ப்பிற்காகப் பிள்ளைகள் வெளிநாடு செல்லும்போது சந்தோஷப்படும் பெற்றோர், தாங்கள் கைவிடப்படும்போது, வேதனைப்பட்டு, அழுது புலம்புகிறார்கள். காரணம் முதுமை, இயலாமை. அன்பிற்குப் பதிலன்பு கிடைக்காமல் தவிக்கிறார்கள்.

அன்புப் பெற்றோரே, உங்கள் பிள்ளைகளை நன்கு படிக்க வைத்து முன்னேற்றுங்கள். அது உங்கள் கடமை - இவ்வுலகத்திற்கு. அதே நேரத்தில் உங்கள் பிள்ளைகளின் ஆன்ம இரட்சணியத்திலும் உங்கள் கடமைகளைச் செய்யுங்கள் – அது நித்திய மோட்சத்திற்கு.

பிள்ளைகளின் தேவ அழைத்தலில் கண்ணுங்கருத்துமாக இருப்பதும், அந்த அழைத்தலை அவர்கள் ஏற்றுக்கொண்டு வெற்றி பெறுவதற்காக உழைப்பதும், எந்த விதத்திலும் அதற்குத் தாங்களே தடையாக இல்லாதிருப்பதும் பெற்றோரின் தலையான கடமை. அது குருத்துவமோ, துறவறமோ, இல்லறமோ, எதுவாயிருந்தாலும், தேவ சித்தத்திற்கு முழுமையாகப் பணிந்து, அதைக் குழந்தைகள் ஏற்றுக்கொள்ளச் செய்வதும், தாங்கள் அதற்குத் தடையாயிராமல், முடிந்த வரை அது நிறைவேறப் பாடுபடுவதும், அதற்காகத் தொடர்ந்து ஜெபித்து வருவதும் பெற்றோரின் கடமை. இந்த முதன்மை யான கடமையில் தவறும் பெற்றோர் தங்கள் குழந்தைகளின் வாழ்வு சீர்குலைந்து, தறிகெட்டுப் போவதற்கும், அது நித்திய சாபத்திற்கு உள்ளாவதற்கும் தாங்களே காரணமாகி விடுகிறார்கள்.

சுருங்கச் சொன்னால், குழந்தைகளுக்கு நல்ல உணவும், உடைகளும், இருப்பிட வசதிகளும், கல்வியும், நல்லதொரு வேலையும், ஒரு நல்ல வாழ்வின் அந்தஸ்தும், சமூகத்தில் நற்பெயரும் தேவைதான். ஆனால் இந்தத் தேவைகள் மரணத்துடன் முடிந்து விடும். ஆனால் ஒருபோதும் அழியாததாகிய ஆன்மாவின் தேவைகள் நித்தியமானவை, அது வாழ்ந்த பரிசுத்த வாழ்வும், அவ்வாழ்வில் அது சம்பாதித்த புண்ணியங்களும் நித்தியத்திற்கும் பரலோகத்தில் அதனோடு நிலைபெற்றிருக்கக் கூடியவை. இதை மனதில் கொண்டு, பெற்றோர் தங்கள் பிள்ளைகளின் ஞான ஜீவியத்தின் மீது அதிக அக்கறை கொண்டு, அவர்களது இரட்சணியத்திற்காக உழைப்பார்களாக.

எல்லா நன்மையும், இரக்கமும், வரப்பிரசாதமும் கடவுளிடமிருந்தே வருகின்றன.

ஒரு மனிதனுக்குத் திறமையோ, அறிவோ, புத்தி சாமர்த்தியமோ, உலகப் பொருட்களை (நியாயமான வழியில்) சம்பாதிக்கும் அறிவோ, இவை எல்லாமே கடவுளிடமிருந்தே வருகின்றன. ஆதலால் நம் கல்வி, அறிவு, புத்தி அனைத்தும் கடவுளின் கொடைகள் என்று நன்றியோடு நினைப்போமாக! அவை தேவைப் படும்போது, அவரிடமே அவற்றிற்காக வேண்டிக்கொள்வோமாக! யாராவது உங்களைப் பாராட்டினாலும், உங்கள் உள்ளத்தில், "சேசுவே, மாதாவே, உங்களுக்கே மகிமை உண்டாவதாக! நன்றியுண்டாவதாக!" என்று சொல்லுங்கள். தன்னிடம் உள்ள நன்மைகளைப் பற்றிப் பெருமை கொள்பவன் மூடனாயிருக்கிறான். ஏனெனில் சகல நன்மைகளுக்கும், இரக்கத்திற்கும் காரணகர்த்தர் கடவுளே. தமது அதியுன்னத மகிமைக்காகவும், ஆத்துமங்களின் இரட்சணியத்திற்காகவும் அவரே இவற்றை நமக்குத் தருகிறார்.

33 நாள் தயாரிப்புடன் முழு அர்ப்பணம் செய்த யாரும் மாதா அப்போஸ்தலர்களாக ஆகலாம்!

மாதாவின் அடிமைகள் – சேசுவின் அடிமைகள் – அர்ப்பணம்



விசுவாசிகள் தங்கள் ஆண்டவரும், இரட்சகருமாகிய சேசுக்கிறீஸ்துநாதருக்குத் தங்களை நிரந்தர அடிமைகளாக அர்ப்பணித்து ஒப்புக்கொடுக்க வேண்டும். இது மிகவும் நியாயமானது என்று அவர்கள் அறிந்திருக்க வேண்டும். இதனைப் பங்குக் குருக்கள் விசுவாசிகளுக்கு அறிவுறுத்த வேண்டும் என்று பரிசுத்த திரிதெந்தீன் பொதுச் சங்கம் அறிவுறுத்துகிறது (Cat. Trid. p. 1, Ch. 3).

நாம் ஒவ்வொருவரும் சேசுவின் அன்பின் அடிமைகளாவதற்காக, மாமரிக்கு நம்மை முழுவதுமாக ஒப்புக்கொடுக்கிறோம். இதுவே அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட் ஏற்படுத்திய 33 நாள் தயாரிப்பு முறையாகும். 33 நாள் என்பது நமதாண்டவரின் நிறை வயதான 33 ஆண்டுகளைக் குறிக்கிறது.

கடந்த 40 ஆண்டுகளாக இந்த அர்ப்பண பக்தி முறையை மாதா அப்போஸ்தலர்கள் சபையின் ஸ்தாபகரான காலஞ்சென்ற சங். அந்தோனி சேவியர் சுவாமியவர்கள் சிறப்பாக நடத்தினார்கள். இந்தத் தயாரிப்பைச் செய்பவர்களுக்குத் தியானம் கொடுப்பதிலும், கருத்தரங்குகள் நடத்தி இந்த அர்ப்பண பக்தியை ஊக்குவிப்பதிலும் சுவாமியவர்கள் மிகுந்த ஆர்வத்தோடு செயல்பட்டார்கள்.

தற்பொழுது, மக்களை ஆன்ம அழிவுக்குள் தள்ளும் விசுவாச மறுதலிப்பு மற்றும் நல்லொழுக்கச் சீர்கேடு ஆகியவற்றின் இன்றைய சூழ்நிலைக்கு மத்தியில் அவர்களை மீண்டும் திருச்சபையாகிய நம் ஆண்டவரின் மந்தைக்குள் கூட்டி வரவும், பறித்துச் செல்லும் ஓநாய்களிடமிருந்து அவர்களைப் பாதுகாக்கவும் தேவமாதா வழியாக கிறீஸ்துவுக்கு முழு அர்ப்பண பக்தி மிகவும் உறுதுணையானது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். ஏற்கெனவே ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் இந்த பக்தியைக் கடைப்பிடித்திருக்கிறார்கள். இதை மறுபடியும் புதுப்பித்து, இந்தப் பணியை இன்னும் அதிக ஆர்வத்தோடு செய்ய நாம் விரும்புகிறோம்.

எனவே, இந்த 33 நாள் தயாரிப்பு முறையை மாதாவின் பிள்ளைகள் அனைவரும் நன்கு புரிந்துகொண்டு, இதைச் செய்து, உங்களையே மாமரியின் வழியாக சேசுவுக்கு முழு அர்ப்பணம் செய்ய வேண்டுமென்று விரும்புகிறோம். இதற்குத் தேவையான புத்தகம் நம் அலுவலகத்தில் கிடைக்கிறது. அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட்டின் முறைப்படி, 33 நாள் தயாரிப்பை உண்மையான பக்தியார்வத்தோடும், தாழ்ச்சியோடும் செய்த யாவரும் மாதாவின் அப்போஸ்தலர்கள் ஆகிறார்கள்.

இந்த அர்ப்பணத்தைப் புதிதாகச் செய்கிறவர்களும், வருடத்திற்கு ஒரு முறை அதைப் புதுப்பிப்பவர்களும், உங்கள் முழு முகவரி, அலைபேசி எண் ஆகியவற்றை எங்களுக்கு அனுப்பும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இந்த அர்ப்பண பக்தி முயற்சி, வருடத்தின் நான்கு திருநாட்களில் அனுசரிக்கப்படுகிறது. அந்தந்தத் திருநாளுக்கு முந்தைய 33 நாட்களை நீங்கள் தேர்ந்துகொள்ள வேண்டும். 33 நாட்கள் தயாரிப்பைச் சிறப்பாகச் செய்து முடித்து, மறு நாளாகிய குறிப்பிட்ட திருநாள் அன்று, தேவ மாதா வழியாக சேசுக்கிறீஸ்துநாதருக்கு உங்களையே முழுவதுமாக அர்ப்பணிக்க வேண்டும். அவர்கள் ஆலயத்தில் ஒரு குருவின் முன்னிலையிலோ, அல்லது தங்கள் இல்லத்திலோ இந்த அர்ப்பண வாக்குறுதியைக் கொடுக்கலாம். குருவானவர் இல்லாதபோது, ஒரு குழுவாக சேர்ந்து ஒப்புக்கொடுக்கலாம், அல்லது தனியாகவும் ஒப்புக்கொடுக்கலாம்.

அர்ப்பணம் செய்தவர்களின் கடமைகள்

எந்தத் திருநாளைத் தேர்ந்தெடுத்து, உங்களை அர்ப்பணம் செய்கிறீர்களோ, அதே திருநாளிலேயே அடுத்த வருடமும் உங்கள் அர்ப்பணத்தைப் புதுப்பிப்பது போதுமானது. எல்லாத் திருநாட்களிலும் இந்த பக்தி முயற்சியைச் செய்வது தேவையில்லை. வருடத்திற்கு ஒரு முறை செய்வதே போதுமானது.

முழு அர்ப்பணம் செய்தவர்கள்:

- *தினமும் குறைந்த பட்சம் 53 மணி ஜெபமாலை சொல்ல வேண்டும்;*
- *முறைப்படி கார்மெல் உத்தரியம் அணிந்து, அதற்குரிய நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும்; (மாதாவின் மந்திரமாலை ஜெபிப்பது, புதன்கிழமைகளில் மாம்ச உணவுகளை விலக்குவது);*
- *மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு ஆறுதலாக, முதல் சனி பக்தியை அனுசரித்து வர வேண்டும்.*
- *சேசுவின் திரு இருதயத்திற்கு ஆறுதலளிக்கும் தலைவெள்ளி பக்தியை ஆர்வத்தோடு அனுசரிக்க வேண்டும்.*

அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட் மார்ச் 25, மங்கள வார்த்தை திருநாள் அன்று இந்த அர்ப்பணத்தைச் செய்வதை அதிகமாக விரும்புகிறார். குடும்பமாகவோ, பங்கு மக்களுடன் சேர்ந்தோ, துறவற மடங்களில் உள்ளவர்களோ, அல்லது தனியாகவோ இந்த அர்ப்பணத்தைச் செய்யலாம். இந்த அர்ப்பணத்தைச் செய்யும்படி மாதாவின் அன்பிற்காக உங்களைச் சுற்றி யிருப்பவர்களைத் தூண்டுங்கள். அதன் மூலம் சேசுவின் இராச்சியம் வரும்படியாக, மரியாயின் இராச்சியத்தை இவ்வுலகில் கொண்டு வரும் கருவிகளாக இருப்பீர்கள்.

மாதா அப்போஸ்தலர்கள் சபை
(Society of Apostles of Mary),
ரோஸா மிஸ்திக்கா,
11/519, சகாயமாதா பட்டணம், 2வது தெரு,
தூத்துக்குடி 628 002.
போன்: 0461 2361989, 9487609983.

நேரத்தை வீணாக்குதல் என்னும் தீமை!

காலம் பொன் போன்றது, கடமை கண் போன்றது – உலகப் பழமொழி. தன் ஆன்ம காரியங்களை அக்கறையோடு கவனிப்பது கிறீஸ்தவனின் பெரிய கடமை. தினமும் தேவ தாயின் உதவியை வேண்டுவது, ஜெபமாலை சொல்வது, தனக்காக மட்டுமின்றி, திருச்சபைக்காகவும், பாப்பரசருக்காகவும் ஜெபிக்க அவனுக்குக் கடமை உள்ளது. மேலும் சேசு மரியாயின் இருதயங்கள் உலகத்தாரின் பாவங்களால் எவ்வளவு வேதனைப்படுகிறார்கள் என்று உணர்ந்து அவர்களுக்கு ஆறுதல் தரும்பொருட்டு ஜெபமாலைகள் செய்வதிலும், சேசு, மாதா மற்றும் திருச்சபையோடு இணைந்து பாவிகள் மனந்திரும்ப ஜெபிப்பதிலும் அவன் அக்கறை கொள்ள வேண்டும். நமக்கு எப்போது, எந்த இடத்தில், எந்த நேரத்தில் மரணம் வரும் என்று தெரியாது. இந்த நிலையற்ற வாழ்வில் அலைபேசியும், ஊடகங்களும், திரைப்படங்களும் குறிப்பாக இளைஞர்களின் நேரத்தை வீணாக்குகின்றன. இவற்றைத் தேவைக்கு மட்டும் பயன்படுத்தி விட்டு, ஆலயத்தில் மட்டுமின்றி, நீங்கள் எப்போதும் ஆண்டவரோடு இணைந்திருக்கும்படி, பேருந்திலும், தூங்குவதற்கு முன்பும், ஓய்வாக இருக்கும்போதும் ஜெபம் செய்யப் பழகுங்கள். நீங்கள் இன்னும் உயிரோடு இருக்கும் வரை நீங்கள் காணும் திவ்ய பலிபூசையும், சொல்லும் ஜெபமாலைகளும், செய்யும் தான தர்மங்களும், புண்ணியங்களும்தான் உங்கள் மரணத் திற்குப் பின் உங்களுடன் வரும். உங்கள் பிள்ளைகள் உங்களுக்காகப் பூசைக்குப் பணம் கொடுப்பார்களா? தெரியாது! சகோதர சகோதரிகளே, இந்நிலையில் உங்கள் நேரத்தை வீணாக்கலாமா? கூடாது. உங்கள் ஒவ்வொரு மணித்துளி யையும் உங்கள் ஆத்துமத்திற்குப் பயனுள்ளதாக்கிக்கொள்ளுங்கள்.

தேவமாதாவின் மோட்ச ஆரோபணம்



அமல உற்பவியாகவும், நித்திய கன்னிகையாகவும், தேவமாதா வாகவும், சேசுநாதரோடு இணை இரட்சகியாகவும் இருக்கிற மாமரி, பாவத்தின் சட்டத்திற்கு உட்பட்டிராததால், அழிவின் சட்டத்திற்கும் உட்படாதவர்களாகவே இருக்கிறார்கள். மரணம் என்பது பாவத்தின் சம்பளம். அது ஜென்மப் பாவத்தால் வந்த சாபம்: ''மனிதா, நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்கே திரும்புவாய்'' என்பதுதான் அந்த சாபம். ஆனால் தேவமாதா ஜென்மப் பாவமின்றி உற்பவித்தவர்கள் என்பதால், இந்த சாபத்திற்கு அவர்கள் மீது அதிகார மில்லை. ஏனெனில் பாவம் இல்லாத இடத்தில் அழிவுக்கும், சாபத் திற்கும் இடமில்லை. ஜென்மப் பாவத்தோடு பிறந்தவர்களும் கூட அழிவின்றி மறு உலகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதற்கு வேதாகமமே சான்றாக இருக்கிறது. உதாரணமாக, ஏனோக் (ஆதி.5:24), எலியாஸ் (4 அரசர். 2:11) என்பவர்களைக் கூறலாம். அப்படியிருக்க, ஜென்மப் பாவமின்றி உற்பவித்துப் பிறந்து, கர்மப் பாவங்கள் ஏதுமின்றி வாழ்ந்தவர்களும், சர்வேசுரனுடைய மனிதப் பொருண்மை யோடு ஒரே பொருளானவர்களுமான தேவமாதா கடவுளால் பரலோகத்திற்கு உண்மையாகவே எடுத்துக்கொள்ளப்பட்டார்கள் என்பதில் சந்தேகம் கொள்ள எந்தக் காரணமுமில்லை.

''மாமரி சகல காரியங்களிலும் தம்முடைய திருச்சுதனுக்கு ஒப்பானவர்களாக இருக்க வேண்டு மென்று விரும்பிய சர்வேசுரன், தமது திருச்சுதனைப் போலவே அவர்களும் மரிக்க வேண்டும் என்று சித்தங்கொண்டார்'' அர்ச். மரிய லிகோரியார் கூறுகிறார். ஆகவே, தனது பரிபூரண மாசற்றதனத்தில் தேவமாதா எந்த அவஸ்தையோ, வேதனையோ, துன்பமோ இன்றி, இனிமை யோடும், மகிழ்ச்சியோடும் தனது இறுதி சுவாசத்தை வெளியிட வேண்டுமென அவர் விரும்பி னார். ஆயினும் மரணம் திவ்ய கன்னிகையைத் தன்னுள் அடக்கிக்கொள்ள இயலாதிருந்தது.

''எழுந்தருளி வாரும், ஆண்டவரே; உம்முடைய இளைப்பாற்றியின் ஸ்தலத்திற்கு எழுந்தருளி வாரும். நீர் அர்ச்சித்த உமது மகிமை விளங்கும் உம்முடைய திருப்பேழையும் எழுந்து வருவதாக'' (சங். 131:8). சம்மனசுக்கள் இப்படி ஆவலோடும், மகிழ்ச்சியோடும் ஆண்டவரை அழைப்பதாக தாவீதரசர் கூறுகிறார். சேசுநாதர் இதன்படி பரலோகத்திற்கு ஆரோகணமாகி, சர்வலோக அரச ராகப் பிதாவின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார். அதே போல குறித்த காலம் வந்தபோது, ஒன்பது மாதங்கள் அவரைத் தனது திருவுதரத்திலும், அதன்பின் 33 ஆண்டுகளாகத் தன் மாசற்ற இருதயத் திலும் சுமந்ததால் அர்ச்சிக்கப்பட்டவர்களும், இரட்சணியப் பலிப்பொருளாக அவரைப் பெற்று, வளர்த்து, கல்வாரியின் மீது நம் பாவங்களுக்குப் பரிகாரமாக அவரோடு தன்னையும் பலியாக்கிப் பிதாவுக்கு ஒப்புக்கொடுத்தவர்களுமான அவருடைய உயிருள்ள திருப்பேழையாகிய தேவமாதா வும் இதோ, மகிமை விளங்கும் பேரரசியாகப் பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுகிறார்கள்.

எலியாஸைச் சுமந்து சென்ற நெருப்பாலான இரதம் சம்மனசுக்களின் ஒரு கூட்டம்தான் என்று வேத விளக்கவுரையாளர்கள் கூறுகிறார்கள். ஆனால் தேவமாதாவைப் பரலோகத்திற்கு அழைத் துச் செல்ல சம்மனசுக்களின் ஒரு படையணியோ, சம்மனசுக்களின் சேனை முழுவதுமோ கூட போதுமானதாகக் கடவுளுக்குத் தோன்றவில்லை! ஆகவே, பரலோக அரசரே தமது பரலோக சபை முழுவதும் புடைசூழ இறங்கி வந்து, தமது திவ்ய அன்னையைப் பரலோகத்திற்கு

அழைத்துக்கொண்டு போகிறார்! இதோ, திவ்ய கன்னிகையும், தேவதாயாருமானவர்கள் தனது திவ்ய சுதனின் மீது, தன் ஆண்டவரின் மீது, சாய்ந்துகொண்டு மோட்சத்திற்கு எழுந்தருளிச் செல்கிறார்கள்.

''சர்வேசுரன் தம்மை நேசிக்கிறவர்களுக்கு ஆயத்தம்பண்ணியிருக்கிறவைகளைக் கண் கண்டது மில்லை, காது கேட்டதுமில்லை, மனிதரின் இருதயத்திற்கு அவைகள் எட்டினதுமில்லை'' என்று அப்போஸ்தலர் கூறுகிறார் (1 கொரி. 2:9). ''தங்கள் செயல்களைக் கொண்டு தம்மை இவ்வுலகில் நேசித்தவர்களுக்கு அவர் ஏற்பாடு செய்திருக்கிற பேரின்பங்களை மனித மனத்தால் புரிந்து கொள்ள இயலாது என்றால், அவரைத் தன் கருவிலே தாங்கி, உலகில் ஒரு மனிதனாக அவரை ஈன்றெடுத்தவர்களும், ஆதாம் ஏவாளைக் குறித்துச் சொன்னது போல், ''இவர் என் மாம்சத்தின் மாம்சமும், என் எலும்பின் எலும்புமாயிருக்கிறார்'' என்று சர்வேசுரனாகிய கிறீஸ்துநாதரைப் பற்றிச் சொல்ல முழுத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறவர்களுமாகிய மாமரியின் உன்னதமான மகிமையின் ஒரு துளியைக் கூட எந்த மனிதனால் புரிந்துகொள்ள முடியும்?'' என்று அர்ச். பெர்னார்ட் கேட்கிறார். ஒரே வாக்கியத்தில் கூறுவதானால், மகா பரிசுத்த கன்னிகையான தேவமாதா, தனது திருச்சுதனின் வலது பாரிசத்தில், பரலோக பூலோக இராக்கினியாக வீற்றிருக்கிறார்கள்.

தமத்திரித்துவக் குடும்பத்தோடு மாதாவுக்குள்ள விசேஷ உறவு, அவர்களுடைய மாசற்ற, பரிசுத்த ஜீவியம், சேசுநாதரின் இரட்சணிய அலுவலில் அவருக்கு அடுத்த நிலையில் நின்று, அதில் முதன்மையான பங்கு வகித்து, அவரோடு சேர்ந்து இரட்சணியப் பேறுபலன்களை நம் இணை இரட்சகி சம்பாதித்தது என்ற பிரதானமான மூன்று காரணங்களுக்காக, தேவமாதா சகல தேவ காரியங்களின் மீதும் முழு அதிகாரமுள்ளவர்களாக இருப்பது முற்றிலும் நீதியானது.

தேவதாய் கன்னிமாமரி இப்போது பரலோகத்தில் இருக்கிறார்கள். அங்கிருந்தபடி, இந்தக் கருணையுள்ள அன்னை இந்தக் கண்ணீர்க் கணவாயில் போராடிக்கொண்டிருக்கிற நம்மைக் கனிவோடும், தயவோடும், நம்மீது பரிதாப உணர்வோடும் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் விரும்பினால், மாமரி நமக்கு இரட்சணியத்தை வாக்களிக்கிறார்கள்! ஆகவே, **பரிசுத்தமாய் ஜீவிக்கிற வரம், பரிசுத்தமாய் மரிக்கிற வரம்** என்னும் உன்னதமான வரங்களை மாதாவிடம் மன்றாடிக் கேட்போம். இவற்றை மாதா பெற்றுத் தருவார்கள் என்ற உறுதியான நம்பிக்கையோடு ஜெப மாலையின் வழியாகவும், நம்முடைய சுயத்தின் முழு அர்ப்பணத்தின் வழியாகவும், பிள்ளை களுக்குரிய உரிமையோடும், அன்போடும் கேட்போமாக.

பூலோகத்திலிருந்து மோட்சத்திற்கு எழுந்து வருகிற தன்னுடைய பிள்ளை ஒன்றின் ஆன்மா வைக் காண்பதை விடப் பெரிய இன்பம் மாதாவுக்கு இல்லை. ஆனால் மனந்திரும்ப மறுக்கிற பாவியாகிய தன்னுடைய ஒரு குழந்தையின் காட்சியைப் போல மாதாவின் மாசற்ற இருதயத் தைக் கிழித்துப் புண்ணாக்குகிற காரியமும் வேறு எதுவுமில்லை. அவனை மீட்க நம் உதவியைக் கேட்டுத்தான் தேவ மாதா பாத்திமாவுக்கு இறங்கி வந்தார்கள், அதற்காகத்தான் முதல் சனி பக்தி முயற்சியைத் தந்தார்கள். முதல் சனி பக்தி முயற்சி என்பது இறுகிப் போன பாவிகளின் இரட் சணிய பக்தியேயன்றி வேறில்லை. இந்த பக்தி முயற்சியை உண்மையான, பிள்ளைகளுக்குரிய மாதா சிநேகத்துடன் நாம் கடைப்பிடிக்கும்போது, மாதா ஏராளமான ஆத்துமங்களை நரக வாசலில் நின்று மீட்டு இரட்சிக்கிறார்கள், அத்துடன் நம் நித்திய இரட்சணியத்தையும் உறுதிப்படுத்து கிறார்கள். **தேவமாதாவின் மோட்ச ஆரோபணத் திருநாள்: ஆகஸ்ட் 15.**

வானவர் புடைசூழ மிக்க மகத்வ சிங்காரமுடன்
தான் மகன் மேற்சாய்ந்து எழுந்தருள் தாய் மரியே வாழி!

அறிந்துகொள்வோம் பாத்திமா செய்தியை!

தேவமாதாவின் மூன்றாம் காட்சி

ஒரு பெரும் அற்புதம் மற்றும் இரகசியத்தின் அறிவிப்பு



இந்தக் காட்சியைப் பற்றிப் பரலோகத் தூதராகிய லூசியா விவரிப்பதைக் கேட்போம்:

"ஜூலை 13, 1917. கோவா தா ஈரியாவின் அந்த ஹோம் ஓக் மரத்தருகில் வந்து சேர்ந்தோம். பெரும் மக்கள் கூட்டம் எங்களைச் சூழ்ந்திருந்தது. சில கணங்களுக்குப் பிறகு, நாங்கள் ஜெபமாலை ஜெபித்துக் கொண்டிருந்த போது அந்த வழக்கமான ஒளிவீச்சையும், நம் மாதா அந்த மரத்தின் மீது நிற்பதையும் நாங்கள் கண்டோம்.

"நான் என்ன செய்ய வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"அடுத்த மாதம் 13-ஆம் தேதி நீ இங்கு வர வேண்டும். பாவிகள் மனந் திரும்பவும், உலக சமாதானத்திற்காகவும், போர் முடிவதற்காகவும் ஜெபமாலை மாதாவுக்குத் தோத்திரமாக ஒவ்வொரு நாளும் தொடர்ந்து ஜெபமாலை சொல்லி வாருங்கள். ஏனென்றால் அவர்கள் மட்டுமே உங்களுக்கு உதவ முடியும்."

(குறிப்பு: கிறீஸ்துநாதரே சமாதானத்தின் அரசராய் இருக்கிறார். இசையாஸ் தீர்க்கதரிசி அவரை "சமாதானப் பிரபு" என்று அழைக்கிறார்; "அவருடைய சமாதானம் என்றும் முடிவடை யாதிருக்கும்" என்றும் வாக்குரைக்கிறார் (இசை. 9:6,7). இதை நிரூபிக்கும் விதமாக, மெசையா வின் பிறப்பு பற்றி இடையர்களுக்கு அறிவிக்க வந்த தேவதூதர்கள், "...பூலோகத்திலே நல்ல மனதுள்ள மனுஷர்களுக்குச் சமாதானம் உண்டாகக்கடவது" என்று பாடினார்கள் (லூக். 2:14). சேசுநாதரும் தமது இவ்வுலக வாழ்வின்போது, யாரைச் சந்தித்தாலும் முதலில், "உங்களுக்குச் சமாதானம் உண்டாவதாக" என்று வாழ்த்துவதைத் தமது வழக்கமாகக் கொண்டிருந்தார் (அரு.20:19,26). இவை அனைத்திற்கும் உச்சக்கட்டமாக, "சமாதானத்தை உங்களுக்கு வைத்து விட்டுப் போகிறேன்; என் சமாதானத்தை உங்களுக்குத் தருகிறேன். உலகம் கொடுக்கிறதைப் போல நான் (அதைக்) கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும், அஞ்சாமலும் இருப்பதாக" என்று கூறி நம்மைத் தேற்றுகிறார் (அரு.14:27).

இங்கே, 'உலக சமாதானத்திற்காகத்" தொடர்ந்து ஜெபமாலை ஜெபிக்கும்படியும், தான் மட்டுமே நமக்கு உதவ முடியும் என்றும் கூறுவதன் மூலம், தனது திருச்சுதனானவர் சகல வரப்பிர சாதங்களிலும், கொடைகளிலும் ஒன்றாக, மெய்யான சமாதானத்தையும் தன்னிடமே ஒப்படைத் திருக்கிறார் என்பதைச் சகல வரப்பிரசாதங்களின் மத்தியஸ்தி தெளிவான வார்த்தைகளில் வெளிப் படுத்துவதைக் கேட்கிறோம். லொரேற்றோ பிரார்த்தனையில் நாம் திவ்ய கன்னிகையிடம் மன்றாடுவது போல, மாதா "சமாதானத்தின் இராக்கினியாக" இருக்கிறார்கள் என்பது அவர்களது வார்த்தைகளில் தெளிவுபடுத்தப்படுகிறது. ஆயினும், தொடர்ந்து தனது பிள்ளைகள் ஜெபமாலை ஜெபிப்பதன் மூலமாகவே உலக சமாதானம் வரும் என்பதையும் மாதா அறிவிக்கிறார்கள். ஜெபமாலையின் வல்லமை மீண்டும் ஒரு முறை மாதாவால் வலியுறுத்தப்படுகிறது. தனி மனித னிலும், குடும்பத்திலும், சமூகத்திலும், நாட்டிலும், உலகத்திலும் சமாதானம் ஏற்பட ஒரே வழியாக, பாத்திமாவில், "தொடர்ந்து ஜெபமாலை ஜெபித்தல்" வற்புறுத்திக் கேட்கப்படுகிறது.

இனி காட்சி தொடர்கிறது: "இதன்பின் நான் சில விண்ணப்பங்களை மாதாவிடம் சமர்ப் பித்தேன். அவை எனக்கு நினைவில் இல்லை. வருடம் முழுவதும் தொடர்ந்து இந்த வரங்களைப் பெறும்படி ஜெபமாலை சொல்வது அவசியம் என்று தேவமாதா சொன்னது மட்டும்தான் ஞாபகம் இருக்கிறது. (குறிப்பு: இந்த வேண்டுகோள்களின் எதிரொலியை ஃபெரெய்ரா அறிக்கையிலும் மற்ற சாட்சிகளின் எழுத்துக்களிலும் நாம் காண முடிகிறது. பலரைக் குணப்படுத்துமாறும், ஒரு சிலரை மனந்திருப்புமாறும் லூசியா வேண்டினாள். ஆனால் சிலரை மட்டும் தான் குணப்படுத்து வதாக மாதா வாக்களித்தார்கள். மரிய கெரெய்ராவின் ஊனமுற்ற மகனைத் தான் குணப்படுத்தப் போவதில்லை என்றும் அவன் ஏழையாகவே இருப்பான் என்றும், ஆனாலும் அவன் தினமும் தன் குடும்பத்தோடு ஜெபமாலை சொல்ல வேண்டுமென்றும் தனக்குத் தேவையானதை அவன் சம்பாதித்துக் கொள்வான் என்றும் மாதா கூறினார்கள். உலக நன்மைகளுக்காகவே ஜெபிப்பதை வழக்கமாகக் கொண்டிருப்பவர்களுக்கு மாதாவின் வார்த்தைகள் நிச்சயம் ஆச்சரியமானவை. இங்கே ஒரு மாபெரும் இரகசியம் வெளிப்படுத்தப்படுகிறது: **நம் ஜெபங்கள் கேட்கப்படாதிருப்பதும் ஒரு வகையான ஆசீர்வாதமே! ஏனெனில், இதை மனமுவந்து ஏற்றுக்கொள்ளும் ஆன்மாக்களில் தேவ திருச்சித்தம் முழுமையாக நிறைவேறுகிறது.** *அந்த ஆன்மாக்கள் கடவுளின் அதிமிக நேசத்திற்கு உரியவையாகவும், மோட்சத்திற்கு அதிகத் தகுதியுள்ளவையாகவும் ஆகின்றன. "பிதாவே, கூடுமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு அகலக்கடவது; ஆயினும் என் சித்தமல்ல, உமது திருச்சித்தமே நிறைவேறக்கடவது" என்னும் நம் ஆண்டவரின் வார்த்தைகளை நினைவில் கொள்வோம்.)*

மாமரியிடம் தங்களுக்கென மன்றாட்டுகளைச் சமர்ப்பித்தவர்களில் ஒருவரான அட்டோ குய்யா என்னுமிடத்திலிருந்து வந்த நோயாளி ஒருவர் விரைவில் தாம் மோட்சம் செல்ல வரம் கேட்டபோது, "அவன் ரொம்பவும் அவசரப்படக் கூடாது. எப்பொழுது வந்து அவனை அழைத் துச் செல்வதென்று எனக்குத் தெரியும்" என்று மாதா கூறினார்கள்.

மேலும், பரிசுத்த ஜெபமாலையின் முக்கியத்துவத்தை தேவமாதா மீண்டும் மீண்டும் பாத்திமா வைப் போல வேறு எங்கும் அறிவித்ததில்லை என்பது உறுதி. தன்னிடம் யார், எந்தப் பிரச் சினையைக் கூறினாலும், அதற்கு உடனே தேவ அன்னை தந்த மருந்து ஜெபமாலையே. பிரான்சிஸ் தன்னைக் காணவும், அவன் மோட்சம் செல்லவும், போர் முடியவும், உலகம் சமாதானத்தைப் பெற்றுக்கொள்ளவும், இங்கே மரிய கெரேய்ராவின் ஊனமுற்ற மகனின் ஜீவனத்திற்கும், தன்னிட மிருந்து வரங்களைப் பெறவும் மாதா தருகிற ஒரே தீர்வு, எல்லா நோய்களுக்கும், பிரச்சினை களுக்கும் ஒரே மருந்து, பரிசுத்த ஜெபமாலையே! *(மூன்றாம் காட்சி தொடரும்)*

பாத்திமா பரிகார ஜெபங்கள்

(1) என் தேவனே, உம்மை விசுவசிக்கிறேன், உம்மை ஆராதிக்கிறேன், உம்மை நம்புகிறேன், உம்மை நேசிக்கிறேன். உம்மை விசுவசியாதவர்களுக்காகவும், உம்மை ஆராதியாதவர்களுக்காகவும், உம்மை நம்பாதவர்களுக்காகவும், உம்மை நேசியாதவர்களுக்காகவும் உமது மன்னிப்பைக் கேட்கிறேன்.

(2) ஓ மகா பரிசுத்த தமத்திரித்துவமே, பிதாவே, சுதனே, இஸ்பிரீத்துசாந்துவே, உம்மை மிகவும் ஆராதிக்கிறேன். உலகெங்கிலுமுள்ள தேவநற்கருணைப் பேழைகளில் இருக்கும் சேசுக்கிறீஸ்துநாதருடைய விலைமதிக்கப்படாத திருச்சரீரத்தையும், இரத்தத்தையும், ஆத்துமத்தையும், தெய்வீகத்தையும், அவருக்கு எதிராகச் செய்யப்படுகிற நிந்தை, துரோகம், அலட்சியத்திற்குப் பரிகாரமாக உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். சேசுவின் திரு இருதயத்தினுடையவும், மரியாயின் மாசற்ற இருதயத்தினுடையவும் அளவற்ற பேறுபலன்களைப் பார்த்து, நிர்ப்பாக்கியப் பாவிகளை மனந்திருப்பும்படி மன்றாடுகிறேன்.

மாதா பரிகார மலர் பத்திரிகையின் அச்சுப் பதிப்பை (Printing) நிறுத்தி விடலாமா?

மாதா பரிகார மலர் கடந்த 45 ஆண்டுகளாக வெளிவருகிறது. அது மாதா மலர், மாதாவுக் கோர் மலர், மாதா பரிகார மலர் என்ற பெயர்களில், பல சிரமங்களுக்கிடையில், மறைந்த நம் ஸ்தாபகர், சங். அந்தோனி சேவியர் சுவாமியவர்களால் வெளியிடப்பட்டது. சுவாமியவர்கள் சுகமில்லாமல் 2009ஆம் வருடம் மருத்துவமனையில் இருந்த வரைக்கும் கூட அதைத் தொடர்ந்து நடத்தி வந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து மாதா அப்போஸ்தலர்கள் சபையினர் இன்று வரை இந்தப் பத்திரிகையை நடத்திக்கொண்டு வருகிறார்கள். பாரம்பரிய உண்மைகளைக் கண்டறிந்து, விசுவாசத்திலும், மாதா பக்தியிலும், விசேஷமாய் மரியாயின் மாசற்ற இருதய பக்தியிலும், பரிகாரக் கருத்திலும், தங்கள் ஞான வாழ்விலும் வளர்ந்து வருவதற்கு இது அநேகருக்குப் பெரும் கலங்கரை விளக்கமாக இருந்து வந்திருக்கிறது.

ஆனால் இன்று, போதிய நிதி வசதி இல்லாததால், இந்தப் பத்திரிகையை அச்சிட்டு வெளி யிடும் பணியை நிறுத்த வேண்டுமோ என்ற சூழல் உருவாகியுள்ளது. கடந்த ஐந்து வருடங்களாக 2,000 சந்தாதாரர்களைக் கொண்டிருந்த இந்தப் பத்திரிகை, தற்சமயம் வெறும் 1,200 பிரதிகளாக மட்டும் அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கிறது. இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வெளிவரும் இப்பத்திரிகையின் மொத்தச் செலவு, ஓர் இதழுக்கு ரூ. 32,000. ஆக, ஒரு வருடத்திற்கு, ஆறு இதழ்களுக்கு ரூ. 1,92,000 செலவாகிறது.

ஆனால் தற்போது விஞ்ஞான வளர்ச்சியால் அனைவர் கையிலும் ஸ்மார்ட் ஃபோன் வந்து விட்டது. மக்கள் மிக எளிதாக, இணைய தளத்தின் பல்வேறு ஊடகங்களில், தங்களுக்குப் பிடித்த கட்டுரைகளையும், புத்தகங்களையும் பதிவிறக்கம் செய்து எளிதில் வாசித்து விடுகிறார்கள். அவர் களில் பெரும்பாலானவர்கள் புத்தகங்களையோ, பத்திரிகைகளையோ வாங்க விரும்புவதில்லை. சந்தா கட்டிப் பத்திரிகை வாங்கி வாசிப்போரின் எண்ணிக்கை மிகக் குறைந்து விட்டது.

எனவே, மாதம் ஒரு முறை மாதா பரிகார மலரை மின்னஞ்சல் பத்திரிகையாக அனுப்பலாமா, அதை அச்சிடுவதை நிறுத்தி விடலாமா என்ற மிகுந்த மன வருத்தம் தரும் சூழ்நிலைக்கு வந்துள்ளோம். காகிதப் பத்திரிகையாக வேண்டுமென்று கேட்கும் ஒரு சிலருக்கு மட்டும் ஜெராக்ஸ் எடுத்து அனுப்ப நினைக்கிறோம்.

இப்பத்திரிகை வெளிவர உதவி செய்யக்கூடிய நம் வாசகர்களில் சிலர் ஒன்றுசேர்ந்து, பத்திரிகைக்கு ஆகும் செலவில் ஒரு கணிசமான பகுதியை நன்கொடையாகத் தந்து உதவ முன்வந்தால், தொடர்ந்து பத்திரிகையை அச்சிட்டு வெளியிடுவது சாத்தியமாகும்.

மாதா அப்போஸ்தலர்களும், வாசகர்களுமாகிய நீங்கள் இதை ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறோம். கடவுளுக்குச் சித்தமானால் பத்திரிகையின் மின்னஞ்சலை ஆங்கிலத்திலும் தயார் செய்து அனுப்பலாம் என்ற கூடுதல் தகவலையும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறோம். தமிழில் ஒவ்வொரு மாதமும் பத்திரிகையை மின்னஞ்சல் செய்வதை 2026, ஜனவரி முதல் நடைமுறைப் படுத்துவது என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். உங்களுடைய மேலான ஜெபங்களையும், ஒத்துழைப்பையும், முக்கியமாக உங்கள் கருத்துக்களையும் எதிர்பார்க்கிறோம். இவண்,

மாதா அப்போஸ்தலர்கள் சபையினர்.

சேசுவின் திரு இருதயத்திற்கு உங்கள் குடும்பங்களை ஒப்புக்கொடுங்கள்



சேசுக்கிறீஸ்துநாதர் தம் திவ்ய இரத்தத்தைக் கொண்டு நம்மை இரட்சித்தவர், நம் இறுதிக் கதியும், நித்தியப் பேரின்பமும் அவரே. அவர் ஆன்மாக்களின் அரசர், கிறீஸ்தவக் குடும்பங்களின் அரசர். ஆனால் கிறீஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களின் வீடுகளில் கூட அவருக்கு எத்தனையோ சமயங்களில் இடமில்லாமல் போகிறது! பேரரசர் அன்பையும் ஆதரவையும் நாடித் தங்குவதற்கு இடம் தேடி, தமது பிரசன்னம் அவசியம் என்று அறிந்த வீட்டு வாசற்படியில் ஏக்கத் தோடு நிற்கிறார். சில வீடுகளில் எப்போதாவது அவரை வரவேற் றாலும், அவரை வெறுமனே மரியாதையின் பொருட்டு ஏற்றுக்கொள் கிறார்களே தவிர, சிநேகத்தின் பொருட்டல்ல. அந்த வீடுகளில் சேசு நாதர், மட்டற்ற அன்பின் சுவாலை விட்டெரிகிற தமது இருதயத் திற்கு வெறும் உபசாரமும், போலியான சிநேகமும்தான் பெறுகிறார்.

சர்வேசுரனுக்காகக் கோவிலில் நாம் செலவழிக்கும் நேரம் மிகக் குறைவு; ஏனெனில் நமது கடமைகளின் நிமித்தம் நமது அநுதின வாழ்வு வீட்டில்தான் நடைபெற வேண்டியிருக்கிறது. நாம் வாழ்வதும், உழைப்பதும், பாடுபடுவதும், மரிப்பதும் கோவிலில் அல்ல. நமது வீடுகளில்தான்; கோவிலில் செலவழிக்கிற கொஞ்ச நேரம் மட்டும் வேத அனுசரிப்பிற்குப் போதும் என்பது போல் எண்ணி நடக்கிறோம். அங்கிருந்து வீட்டுக்கு வந்தால், நம் இல்லங்களின் ஆண்டவராகவும், அரசராகவும் இருப்பவருக்கு, அங்கே இடமில்லை. ஆலயத்தில் மட்டுமல்ல, நம் இல்லத்திலும் அவர் அரசாள வேண்டும்; அவருடைய பிரசன்னத்தை நம் இல்லங்களில் நாம் உணர வேண்டும்.

ஆண்டவரின் ஆறுதலுக்குரிய பிரசன்னத்தை நம்மால் இயன்ற அளவு புதுப்பித்து, அதன் பலனை அடைய, அவருடைய அரசாட்சியின் ஸ்தாபகம் நமக்கு உதவுகிறது. அவர் மெய்யாகவே திவ்ய நற்கருணையில் இருப்பதற்கும், அவர் மீதுள்ள அன்பின் அடையாளமாக, அவரது படத்தை வீட்டில் ஸ்தாபித்து வைப்பதற்கும் பெரும் வித்தியாசம் உண்டுதான். ஆயினும், அரசாட்சி ஸ்தாபகத்தின் வழியாய், சேசுநாதர் வீட்டில் பிரவேசித்துக் குடும்ப வாழ்வில் பங்கு பெற்று, அதை முழுவதும் நடத்துகிறார்; அவரது சிநேகம் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் உயிராகவும், அவரது இருதயம் அவர்களுக்கு இருப்பிடமாகவும் இருக்கிறது என்பதும் முற்றிலும் உண்மையே.

திரு இருதய வணக்கத்திற்கும், திவ்ய நற்கருணை பக்திக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு. நமது போதகத்திலும், பீடம்-இல்லம், நற்கருணை-குடும்ப வாழ்வு என்ற இரு கூடாரங்களையும் இணைக்கிற உறவு நெருங்கிய சம்பந்தமுள்ளதாக இருக்க வேண்டும்; திரு இருதய அரசாட்சி ஸ்தாபகத்தின் கருத்தைச் சரியாய்க் கண்டுணர்ந்தால், அவை இரண்டிலும் அதே சேசுநாதர் நமது அரசரும் நண்பருமாக இருக்கிறார் என்பதை உணர்வோம். குடும்பங்களில் நற்கருணை பக்தி சிறந்து விளங்கினால், அவர் மெய்யாகவே நமது எஜமானரும், அரசருமாயிருப்பார்.

ஆதலால், உங்கள் வீடுகளில் சேசுநாதரை அரசராகவும், நண்பராகவும் ஏற்றுக்கொள்ளுங்கள். அவர் அரசர்; பிலாத்துவிடம் அவரே இப்படிச் சொன்னார்: “நான் இராஜா என்று நீரே சொல்லு கிறீர்” என்று. ஒவ்வொரு குடும்பமும், ஒவ்வொரு தேசமும், தமது இராஜரீகத்தை அங்கீகரித்துப் மகிமைப்படுத்த வேண்டுமென்று அவர் விரும்புகிறார். அவர் சிருஷ்டிப்பின் உரிமையாலும்,

இரட்சணிய உரிமையாலும், அரசராயிருக்கிறார். இதன் நிமித்தமும். இன்னும் பரிகார முயற்சி யாகவும் அவரது திரு இருதயத்துக்கு ஆறுதலாகவும் உன்னிடம் இதைக் கேட்கிறார்.

கணக்கற்ற வீடுகளின் வாசலருகில் அவர் நின்று கொண்டிருக்கிறார். அவரது சிரசில் முள்முடி இருக்கிறது, அவரது தலைமயிர் இராக்காலப் பனியால் நனைந்திருக்கிறது; உலகில் அவருக்கு எதிராக எழும்பியிருக்கும் புயலிலிருந்து பதுங்குமிடம் தேடி, அவர்கள் வீட்டில் தம்மை ஏற்றுக் கொள்ளக் கேட்கிறார். சட்டசபைகளிலிருந்தும், நீதிமன்றங்களில் இருந்தும், பள்ளிக்கூடங்களி லிருந்தும், அவரது ஆலயங்களிலிருந்தும் கூட அவரை அகற்றி விட்டார்கள். அவரது திருப் பேழைகள் வெறுமையாயிருக்கின்றன. அவமானங்கள் நிறைந்து, நன்றி கெட்ட துரோகிகள் தம்மீது பொழியும் வசைச் சொற்களால் நிந்தையடைந்து, தன்னந்தனியே பிச்சைக்காரனைப் போல் அவர் அலைந்து திரிகிறார். அவருக்குச் செவிகொடு: காயப்பட்ட கரத்தால் அவர் உன் கதவைத் தட்டி, "**நான் சேசுநாதர், பயப்படாதே, சிநேகத்தின் அரசர் நான், கதவைத் திற**" என்று உன்னை அழைக்கிறார்.

"பரிதாபத்திற்குரிய சேசு" என்பார் அர்ச். பிரான்சிஸ் சலேசியார். அவரது சிநேகிதர் என்று சொல்லிக்கொள்கிற நீங்களாவது அவர்மீது பரிதாபப்படுங்கள். மக்கள் வெறிகொண்டு அவரைப் பின்தொடர்ந்து, "அவரைக் கொல்லுங்கள், மரணமே அவருக்குரியது, அவரைச் சிலுவையில் அறையுங்கள், அவர் எங்கள் மீது ஆட்சி புரிய விட மாட்டோம்" என்று கூச்சலிட்டு ஆர்ப்பரிக் கிறார்கள். இந்தத் தேவதூஷணங்களுக்கு ஈடாக, நீங்கள் உங்கள் கதவுகளைத் திறந்து, "**ஆண்டவரே, நாங்கள் உம்மை நேசிக்கிறோம். இந்த வீட்டில் தேவரீர் ஆட்சி செலுத்தும்படி உம்மை மன்றாடுகிறோம். நீரே எங்கள் இராஜாவாயிருப்பீராக!**" என்று சொல்லுங்கள். அவர் உன்னிடம் கேட்கிற உபசாரம், உனக்குச் சகலத்திலும் மேலான வரமாயிருக்கும் என்று நிச்சயமாயிரு; உன் நன்மையை உத்தேசித்தே அவர் உன் இல்லத்தில் பிரவேசிக்க விரும்புகிறார்.

உன் வாசலில் கூப்பிட்டுக் கொண்டிருப்பவர் மாபெரும் இணையற்ற ஆறுதல் அளிப்பவர். சர்வேசுரனும், மனிதனுமானவர், கஸ்தி நிறைந்தவர், ஆறுதல் அளிக்கும் வரத்தை அவர் வைத் திருக்கிறார். குடும்ப பாரத்தால் தள்ளாடும் ஒரு தகப்பன், ஒரு தாய், விதவை அல்லது மகளின் இருதயத்திலுள்ள புண்ணில் தைலம் வார்க்கக் கூடியவர் சேசுநாதரன்றி வேறெவருமில்லை. சரீரத்தின் காயங்களைக் குணப்படுத்துவதற்கு, எவ்வளவோ காலம் சிகிச்சை செய்ய வேண்டி யிருக்கிறது. துயரத்தால் பிளந்து போயிருக்கும் இருதயங்களைக் குணப்படுத்த கருணைமிக்க ஸ்தாபகம் ஒன்று இருக்கிறது. குடும்பத்தில் சேசுவின் திரு இருதய அரசாட்சி ஸ்தாபகம்தான் இது. இருளடர்ந்த வேளைகளில் அவர் மீண்டும் மீண்டும் தட்டிக் கூப்பிடுகிறார். "தாமதம் செய்யாதே. ஆறுதலற்ற ஆத்துமங்கள் இங்கு உண்டென்று எனக்குத் தெரியும். சீக்கிரம் கதவைத் திற, **நான் சேசுநாதர், நானே இரக்கம்**" என்கிறார்.

உன்மீதே பரிதாபப்பட்டு, அவருக்குக் கதவைத் திறந்துவிடு; உனது சிலுவைகளை யெல் லாம் சுமப்பதில் உனக்குத் துணைபுரியக் கூடியவரை உள்ளே வரச்சொல். அவர் மனுமக்களின் நண்பர், சுயநலம் பாராட்டாத உண்மையான சிநேகிதர், அவர் ஒருக்காலும் மாற மாட்டார், ஒருக்காலும் உன்னைக் காட்டிக்கொடுக்க மாட்டார். அவருக்கு உன் கதவைத் திற. உனது பெத்தானியாவை அவருக்குத் திறந்து வை. உன் இல்லம் அவருடையதாகும். அதுவே உனக்கும், உன் வீட்டாருக்கும் பூலோக மோட்சமாகும்.

"**சேசுவின் திரு இருதயமே, என் நம்பிக்கையெல்லாம் உமது பேரில் வைக்கிறேன்! சேசுவே, உம்மை நேசிக்கிறேன்**" என்று அடிக்கடி சொல்லுங்கள். (சேசுவின் திரு இருதய அரசாட்சியை ஏற்படுத்தும் முறை பாரம்பரிய திருக்குடும்ப பக்திமாலை ஜெபப் புத்தகத்தில் உள்ளது.)

மரியாயின் மாசற்ற இருதயத்தை நேசித்து, அதற்கு ஆறுதல் அளிக்க முன்வருவோமாக!

அன்புப் பரிகாரமே மிகச் சிறந்த பக்தி முயற்சி



அன்பில்லாமல் ஆயிரம் பக்தி முயற்சிகளைச் செய்யலாம். அவற்றால் யாருக்கு என்ன பயன்? அலட்சியமாய், வாடிக்கையாய், சம்பிரதாயத்திற்காக, முகத்தாட்சணியத்திற்காக, பிறர் மெச்ச வேண்டும் என்பதற்காக, நாம் என்னென்ன பக்தி முயற்சிகளைச் செய்தாலும், மாதாவுக்கு அவற்றால் என்ன ஆறுதல் ஏற்படப் போகிறது? நம் பக்தி முயற்சியின் அடிப்படையாக இருக்க வேண்டிய அன்பு எப்படி இருக்க வேண்டும்? மாசற்ற குழந்தைகள் தங்கள் தாய்க்குக் காட்டும் அன்பைப் போல் இருக்க வேண்டும். நாம் அந்தக் குழந்தைகளைப் போல நம் திவ்ய தாயாரை நேசிக்க வேண்டும். அந்த நேசத்தால் தூண்டப்பட்டு, ஆறுதல் மொழிகளாலும், பரிகாரச் செயல்களாலும் மாசற்ற இருதயத்திற்கு ஆறுதல் அளிக்க வேண்டும்.

பாவத்திலேயே வாழ்ந்துகொண்டிருக்கும் ஒருவன் எப்படி இந்த மாசற்ற இருதயத்தைத் துளைத்திருக்கும் முட்களை அகற்ற முடியும்? நம்மிடம் மாதாவின்மீது கொஞ்சமாவது அன்பிருந்தால், அந்தத் திரு இருதயத்தைச் சாவான பாவத்தால் குத்தித் துளைப்போமா? அல்லது அநேக அற்பப் பாவங்களால் வேதனைப்படுத்துவோமா? எப்படி முடியும்? ஆகவே, நமக்கு மாதா மீது துளியாவது உண்மையான அன்பிருந்தால், நாம் முதலில் எல்லாப் பாவங்களையும் அடியோடு நம்மிடமிருந்து ஒழிக்க வேண்டும். எல்லாப் பாவ சந்தர்ப்பங்களையும் தயவு தாட்சணியமின்றி நம்மை விட்டு அகற்ற வேண்டும். அப்போதுதான் நாம் உண்மையாகவே மாதாவை நேசிக்கத் தொடங்க முடியும்.

நம் அன்புள்ள தாயாரை ஆழ்ந்த விதமாகவும், உண்மையாகவும், வேகமுள்ள மனதோடும், மென்மையான முறையிலும், பற்றியெரியும் அன்பைக் கொண்டு நாம் நேசிக்க வேண்டும். அந்த மாசற்ற இருதயம் அனுபவிக்கிற வேதனையை - தன்னைத் துளைக்கும் பாவ முட்களால் நிறைந்து, அது படும் வேதனையைக் கண்டு பரிதவித்து, அவர்களுடைய திருச்சுதனும், நம் ஆண்டவர்தாமே நம்மைப் பார்த்து, "நன்றியற்ற மனிதர்களின் பாவ முட்களால் ஒவ்வொரு கணமும் துளைக்கப்படுகிற உன் மிகப் பரிசுத்த மாதாவின் இருதயத்தின் மீது இரக்கம் கொள்வாயாக. ஒரு பரிகாரச் செயலின் மூலமாக அவற்றை அகற்றக்கூடியவர்கள் யாருமில்லை" என்று கேட்கும் அளவுக்கு, நம் திவ்ய அன்னை தனக்கு எதிராகக் கட்டிக்கொள்ளப்படும் பாவங்களால் அனுபவிக்கும் துன்பம் கொடூரமானதாக இருக்கிறது. இதைப் புரிந்துகொண்டு, நம் உருக்கமுள்ள நேசத்தோடு நாம் ஒவ்வொருவரும் பாவங்களிலிருந்து முழுமையாக விடுபடவும், அன்பின் பரிகாரச் செயல்களைக் கொண்டு அவர்களுக்கு ஆறுதலளிக்கவும் முன்வர வேண்டும்.

இந்தக் காரணத்திற்காகவே தேவமாதாவும், அவர்களுடைய திவ்ய பாலனும் போன்றவேத்ராவில் **1925**, டிசம்பர் **10** அன்று சகோதரி லூசியாவுக்குத் தோன்றி, ஐந்து முதல் சனி பக்தியை அறிமுகப்படுத்தினார்கள். ஆயினும், இது மிகச் சிறிய அளவுதான். "வருடத்திற்கு ஒரு முறையாவது நல்ல பாவசங்கீர்த்தனம் செய்கிறது" என்ற அடிப்படை அளவு மட்டும் கேட்கும் திருச்சபையின் கட்டளையைப் போன்றதுதான். ஆனால் கடவுளை உண்மையாகவே நேசிக்கிறவன் குறைந்தது வாரம் ஒரு முறையாவது பாவசங்கீர்த்தனம் செய்ய ஓடிச் செல்வான். அவ்வாறே,

தனது பரலோகத் தாயாரை உண்மையாகவே நேசிக்கிற அவர்களுடைய ஒவ்வொரு மகனும், ஐந்து முதல் சனிக்கிழமைகள் மட்டுமல்ல, மாறாக, மாதத்தின் ஒவ்வொரு நாளிலும், ஏன், வாழ்நாள் முழுவதிலும் கூட, தனது மகா பரிசுத்த அன்னையின் இருதய ஆறுதலுக்காக, அவர்கள் கேட்டுக் கொண்ட பரிகார முயற்சிகளாகிய பாவசங்கீர்த்தனம், திவ்ய நற்கருணை, பரிசுத்த ஜெபமாலை, மாமரியுடன் தங்கியிருந்து கால்மணி நேரம் ஜெபமாலை இரகசியங்களைத் தியானித்தல் ஆகியவற்றை அன்போடும், ஆர்வத்தோடும் கடைப்பிடிப்பான்.

ஆகவே, மாதாவின் பிள்ளைகளும், அப்போஸ்தலர்களுமாகிய நாம் முதல் சனி பக்தியை அன்போடு கடைப்பிடிப்போம். ஒவ்வொரு நாளும் இந்தக் கருத்துக்காக, பாவம் தவிர மற்ற நம் நினைவுகள், சொற்கள், செயல்கள், ஜெபங்கள், நாம் செய்யும் வேலைகள், காணும் திவ்ய பலி பூசைகள், வாங்கும் திவ்ய நற்கருணைகள், செய்யும் ஒறுத்தல், பரித்தியாக முயற்சிகள், தவ முயற்சிகள் ஆகிய அனைத்தையும் மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு எதிராக செய்யப்படும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக ஒப்புக்கொடுக்க வேண்டும்.

இந்த பக்தி முயற்சியைத் தனியாகவோ, அல்லது குடும்பங்களிலும், பங்குகளிலும் பலர் இணைந்தும், துறவற மடங்களிலும் செய்யலாம். இதே முறையில்தான் சேசுவின் திரு இருதயத் திற்கு ஆறுதல் அளிக்கும் நம் பரிகார முயற்சிகளும் இருக்க வேண்டும்.

முதல் சனி பக்தியில் கடைப்பிடிக்க வேண்டிய பரிகாரக் கருத்துக்கள்:

மரியாயின் மாசற்ற இருதயத்திற்குப் பரிகாரம் செய்யும் கருத்தோடு, தொடர்ந்து ஐந்து முதல் சனிக்கிழமைகளில்:

1. பாவசங்கீர்த்தனம் செய்து, 2. திவ்ய நன்மை உட்கொண்டு, 3. ஜெபமாலை ஜெபித்து, 4. ஜெபமாலை தேவ இரகசியங்களைத் தியானித்தபடி 15 நிமிடம் தங்கியிருக்க வேண்டும்.

இதைச் செய்பவர்களுக்கு, "அவர்களது ஆத்துமங்களின் இரட்சணியத்திற்கு அவசியமான அனைத்து வரப்பிரசாதங்களையும் கொண்டு அவர்களது மரண சமயத்தில் உதவுவேன் என்று வாக்களிக்கிறேன்" என்று மாதாவே கூறியிருக்கிறார்கள்.

முதல் சனி பக்தி முயற்சியின் பரிகாரக் கருத்துக்கள்:

1. தேவமாதா ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்தார்கள் என்ற சத்தியத்தை மறுக்கும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக (ஜனவரி, ஜுலை);

2. தேவமாதா சர்வேசுரனுடைய தாய் என்ற சத்தியத்தை மறுக்கும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக (பிப்ரவரி, ஆகஸ்ட்);

3. தேவமாதா நித்திய கன்னிகை என்ற சத்தியத்தை மறுக்கும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக (மார்ச், செப்டம்பர்);

4. தேவமாதா பக்தியை இளம் உள்ளங்களிலிருந்து அகற்றும் துரோகத்திற்குப் பரிகாரமாக (ஏப்ரல், அக்டோபர்);

5. தேவமாதாவின் பக்திப் பொருட்களை அவமதித்து அகற்றும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக (மே, நவம்பர்);

6. ஐந்து நிந்தைகளுக்கும் சேர்த்துப் பரிகாரமாக (ஜுன், டிசம்பர்). இதுவே முதல் சனி பக்தி முயற்சியை அனுசரிக்கும் முறையாகும்.

வாருங்கள்! நம் அன்னைக்கு ஆறுதல் அளிப்போம்! இதன் மூலமே தேவ இரக்கம் தூண்டப்பட்டு, கத்தோலிக்கத் திருச்சபையின் பாரம்பரியம் மிகுந்த மகிமையோடு திரும்ப வரும்!

தேவ இரகசிய ரோஜா மாதா



விசுவாச போதகத்திற்கான திருச்சங்கம், 1947 முதல் 1966 வரை இத்தாலியின் பியெரினாவுக்கு தேவ இரகசிய ரோஜா மாதா தந்த காட்சிகளை அதிகார பூர்வமாக அங்கீகரித்துள்ளது. இத்தாலியின் ப்ரஸ்ஸியா மேற்றிராசன ஆயர் 1947ஆம் ஆண்டிலேயே இந்தக் காட்சிகளை அங்கீகரித்திருந்தார். 5.7.2024 அன்று ப்ரெஸ்ஸியாவின் இன்றைய மேற்றிராணியாருக்கு எழுதப்பட்டதும், பாப்பரசர் பிரான்சிஸால் அங்கீகரிக்கப்பட்டதுமான ஒரு மடலில், கர்தினால் விக்டர் மனுவேல் ஃபெர்னாண்டெஸ், பியெரினாவின் செய்தி, திருச்சபையின் போதகத்தோடு ஒத்திருப்பதாக அறிவித்தார்.

13.7.1947 காட்சியில், மாமரியின் திருநெஞ்சின் மீது மூன்று வாள்களும், வெண்மை, சிவப்பு, பொன்னிறங்களில் மூன்று ரோஜாக்களும் காணப் பட்டன. மாமரி பியெரினாவுக்குத் தந்த விளக்கத்தின்படி, முதல் வாள் **குருக்களும், துறவிகளும் தங்கள் தேவ அழைத்தலை இழந்து போகும் தேவ நிந்தையையும்**, *இரண்டாவது வாள்* **குருக்களும், துறவிகளும், கன்னியரும் சாவான பாவத்தில் வாழும் நிந்தையையும்**, *மூன்றாவது வாள்* **குருக்களும், துறவிகளும் தேவ அழைத்தலைக் கைவிட்டு, விசுவாசத்தை இழந்து, திருச்சபையின் எதிரிகளாக மாறும் நிந்தையையும்** *குறித்தன. வெண் ரோஜா ஜெப உணர்வையும், சிவப்பு ரோஜா பரிகார மற்றும் பரித்தியாக உணர்வையும், பொன் ரோஜா மனந்திரும்பித் தவம் செய்தலின் உணர்வையும் குறித்தன. மேலும், விசுவாசிகள் திவ்ய பலிபூசை, திவ்ய நன்மை, பரிசுத்த ஜெபமாலை, திருமணி ஆராதனை என்னும் பக்தி முயற்சிகளை பக்தியோடு அனுசரித்து, தேவ ஊழியர்களின் தேவ நிந்தைகளுக்குப் பரிகாரம் செய்யும்படி திவ்ய கன்னிகை கேட்டுக்கொண்டார்கள்.*

13ஆம் சிங்கராயர் கண்ட காட்சியின்படி, திருச்சபையை அழித்து விட, உலகாதாய மனிதர்களின் துணையோடு 1884ல் சாத்தான் இறுதிப் போரைத் தொடங்கியதில் இருந்தே, தேவ ஊழியர்களின் பரிசுத்த வாழ்வு தளர்ச்சியடையத் தொடங்கி விட்டது. பாத்திமாவில் தேவ அன்னை தனது மூன்றாம் இரகசியத்தில், தேவத் துரோகிகளான தேவ ஊழியர்கள் பற்றியும், அதனால் வரவிருந்த மாபெரும் விசுவாச அழிவு பற்றியும் எச்சரித்தார்கள். ஆனால் அந்த இரகசியம் பசாசின் தந்திரத்தால் மறைக்கப்பட்டு விட்ட நிலையில், திவ்ய கன்னிகை மீண்டும் இத்தாலியின் மோன்டிஷியாரி, ஃபோன்டானெல் என்னும் இடங்களில் பியெரினாவுக்குத் தோன்றி, தேவத் துரோகிகளான தேவ ஊழியர்கள் மனந்திரும்பும்படி ஜெபிக்கவும், திவ்ய பலிபூசை, திவ்ய நன்மை, பரிசுத்த ஜெபமாலை, திருமணி ஆராதனை ஆகியவற்றில் அடிக்கடி பங்குபெறவும், தவம், பரிகாரம், பரித்தியாகம், ஆகியவற்றில் ஈடுபடவும் தனது பிள்ளைகளிடம் கேட்டுக்கொண்டார்கள்.

இந்தக் காட்சிகள் பாத்திமாவின் தொடர்ச்சியே என்று காட்டவே திவ்ய அன்னை பிரான்சிஸ், ஜசிந்தாவையும் அழைத்து வந்தார்கள். ஒருவேளை மாதாவின் வேண்டுகோள்கள் நிறைவேற்றப்பட்டிருக்கும் என்றால், இன்று நாம் காணும் தேவ ஊழியர்களின் விசுவாச அழிவிலிருந்தும், திருச்சபை முழுவதிலும் காணப்படும் விசுவாச மறுதலிப்பிலிருந்தும் திருச்சபை காப்பாற்றப்பட்டிருக்கும்.

ஆயினும், இப்போதாவது மாதா கேட்டுக்கொண்ட பக்தி முயற்சிகளையும், விசேஷமாக, முதல் சனி பக்தி முயற்சியையும் அதிகமதிகம் கடைப்பிடித்து, ஜெபம், தவம், பரித்தியாகம் செய்து, தேவ ஊழியர்களின் தேவத் துரோகங்களுக்குப் பரிகாரம் செய்யப் போதிய அளவில் நாம் முன்வருவோம் என்றால், நிகழ்ந்துகொண்டிருக்கிற ஆன்மாக்களின் பேரழிவைத் தடுத்து நிறுத்தி, சாத்தானின் தலையை மிதித்து நசுக்க தேவ இரகசிய ரோஜா மாதா வல்லமையுள்ளவர்களாகவே இருக்கிறார்கள் என்பதை நாம் காண்போம். **தேவ இரகசிய ரோஜா மாதா திருநாள்: ஜூலை 13.**

மெசையாவின் வருகைக்காக சூசை பாலன் ஜெபிக்கிறார்.

கன்னிகையான மரிய செசீலியா பெய்ஜுக்கு வெளிப்படுத்தப்பட்ட அர்ச். சூசையப்பரின் வாழ்க்கை வரலாறு என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது.)



கடவுள் ஒரு மெசையாவை அனுப்புவதாக வாக்களித்திருக்கிறார் என்று சூசையின் பெற்றோர் அவருக்கு அறிவித்தனர். இஸ்ராயேல் இனம் எவ்வளவு ஏக்கத்தோடு அவருக்காகக் காத்திருக்கிறது என்றும், பிதாப்பிதாக்கள் அவருடைய வருகையை எவ்வளவு ஏங்கித் தேடினார்கள் என்றும் அவர்கள் அவருக்கு விளக்கிக் கூறினர். மேலும், சூசையின் காவல்தூதரும் அவரது ஒரு கனவில் இதைப் பற்றி அவருக்குக் கூற, சூசை பாலன் தேவ வாக்குறுதி நிறைவேற வேண்டு மென்ற உயிருள்ளதும், பற்றியெரிவதுமான ஓர் ஆசை யால் நிரப்பப்பட்டார். இதற்காக, பக்தியுருக்கத்தோடு அவர் கடவுளிடம் மன்றாடினார், இந்தக் காத்திருத் தலின் காலத்தைக் குறைக்கத் திருவுளமிரங்கும்படி அவர் வேண்டினார். அன்று முதல் இந்தக் கருத்துக் காகத் தம் எல்லா ஜெபங்களையும் அவர் ஒப்புக் கொடுக்கத் தொடங்கினார்.

கடவுள் மாசற்றவராகிய சூசையின் இந்த ஜெபங்களுக்கு மகிழ்ச்சியோடும் திருப்தியோடும் செவிசாய்த்தார்; இது பற்றிய வெளிப்படையான சான்றையும் அவர் அவருக்குத் தந்தருளினார். ஏனெனில் சூசை இந்த மன்றாட்டுக்களைச் செய்யும்போதெல்லாம், உன்னத இறைவன் சூசையின் இருதயத்தைச் சந்தோஷத்தாலும், ஆறுதலாலும் நிரப்பினார். இதன் காரணமாக, தொடர்ந்து இன்னும் அதிகமாகத் மன்றாடும்படி இயல்பாகவே சூசை தூண்டப்பட்டார்.

கடவுளை நோகச் செய்யக்கூடிய ஏதாவது தம் வீட்டில் நிகழும்போதெல்லாம்--இது அவருடைய உறவினர்களிடையே நிகழ்ந்தது--ஓ, இச்சமயங்களில் தான் சூசை வேறு எப்போ தையும் விட அதிகத் துயரமும் மனச் சோர்வுமுள்ளவராகக் காணப்பட்டார். இளவயதின் காரணமாக, அவர்களைக் கண்டிக்க முடியாதிருந்தாலும், கண்ணீர் சிந்துவதன் மூலம் அவர்களது பாவத்தைத் தாம் எவ்வளவு வெறுக்கிறார் என்று அவர் காண்பிப்பார்.

இவ்வாறு, ஒரு நாள் அவர் அழுவதைக் கண்டபோது, அவரது தாய் அவரிடம், ஏன் இப்படி அவர் மன வேதனையோடு இருக்கிறார் என்று கேட்டபோது, "கடவுளை மகிழ்விக்க நான் என்ன செய்ய வேண்டும் என்றும், அவரை வேதனைப்படுத்தாதபடி நாம் எப்படி எல்லாப் பாவத்தையும் தவிர்க்க வேண்டுமென்றும் நீங்கள் மிக அடிக்கடி எனக்குக் கற்பித்திருக்கிறீர்கள். அப்படியிருக்க, நம் சொந்த வீட்டிலேயே அவர் நோகடிக்கப்படுவதைக் கண்டு நான் அழாதிருக்க வேண்டு மென்று விரும்புகிறீர்களா?" என்று மிகுந்த கவலையோடு அவர் பதிலளித்தார். நேசிக்கப்படவும், சங்கை செய்யப்படவும், நோகடிக்கப்படாதிருக்கவும் கடவுள் எவ்வளவு அதிகம் தகுதியுள்ளவ ராக இருக்கிறார் என்று அவர் மிக நன்றாகப் புரிந்து வைத்திருந்ததாலேயே அவர் அதிகம்

துயரத்திற்குள்ளானார். பாவமானது தமது மிகுந்த நேசத்திற்குரிய ஆண்டவருக்கு எவ்வளவு வெறுப்புக்குரியதாக இருந்தது என்பதை அவர் புரிந்து வைத்திருந்தார். சூசையின் தாய் இதை மனதில் இருத்தியவளாக, இனி தன் வீட்டில் எந்த ஒரு மனிதனாலும் கடவுளின் கோபம் தூண்டப்படாதபடி விழிப்பாயிருக்க அப்போது முதல் மிகுந்த சிரமம் எடுத்துக்கொண்டாள். பாவம் செய்தவர்களை அவள் மிகக் கடுமையாகக் கண்டித்தாள். இவ்வாறு, அவருடைய பெற்றோரின் இல்லம் புண்ணியத்தின் பள்ளிக்கூடம் என்று அழைக்கப்படத் தகுதியுள்ளதாயிற்று. அதனுள் இருந்தவர்கள் அனைவரும் தேவ திருச்சட்டத்தை அனுசரிப்பதில் மிகவும் விழிப்பா யிருந்தனர்.

சூசையின் தாய் தன் மகனைப் பற்றித் தனக்குக் கூறப்பட்ட இரகசியங்களைப் பற்றி மிகுந்த விவேகமும், எச்சரிக்கையும் உள்ளவளாக இருந்தாள். சம்மனசானவர் தனக்கு அறிவித்ததை, அதாவது தன் மகன் ஒரு நாள் மெசையாவைக் காண்பார், அவருடைய தோழமையில் வாழ்வார் என்ற உண்மையை அவள் ஒருபோதும் மறக்கவில்லை. இவை அனைத்தின் காரணமாக, சூசை கடவுளால் மிக அதிகமாக ஆதரிக்கப்பட்டிருந்ததைக் கண்டு அவள் வியப்படையவில்லை. அவருக்குக் காட்டப்பட்ட மிகுந்த தெய்வீகத் தாராளத்திற்காகக் கடவுளுக்குத் துதி புகழ்ச்சியும் நன்றியும் செலுத்த அவள் முயன்றாள். எத்தனையோ பிதாப்பிதாக்களுக்கும், தீர்க்கதரிசிகளுக்கும் மறுக்கப் பட்ட, மெசையா உலகிற்கு வருவதைக் காணும் மாபெரும் சலுகை, தன் மகனுக்குத் தரப்பட விருந்ததைப் பற்றிய நினைவால் அவள் சந்தோஷக் கண்ணீர் வடித்தாள்.

அவள் அடிக்கடி சூசையின் நற்பாக்கியத்தைப் பற்றிய ஒரு பரிசுத்த பொறாமையால் நிரப்பப் பட்டவளாக, அவரை நோக்கி அடிக்கடி, "ஓ, என் பரிசுத்த குழந்தாய்!" என்பாள். இதைக் கேட்ட சூசை ஒரு முறை அவளிடம், ஏன் இப்படிச் சொல்கிறாள் என்று கேட்டார். "ஏனெனில் கடவுள் உன்னை மிக அதிகமாக நேசிக்கிறார் என்பதை நான் அறிவேன்" என்று அவள் பதிலளித்தாள். (வானதூதரால் தனக்கு வெளிப்படுத்தப்பட்ட இரகசியத்தை அவள் ஒருபோதும் அவரிடம் கூறவில்லை.) சூசை வானத்தை நோக்கித் தம் கரங்களை உயர்த்தியபடி, "ஆ, உண்மைதான்! கடவுள் அளவுக்கு அதிகமாக என்னை நேசிக்கிறார் என்று நான் நம்புகிறேன்!" என்றார். அவரது முகம் இப்போது சிவந்து போனது, அவர் அகமகிழ்ந்து அக்களிப்புக் கொண்டார்.

ஆனால் அதன்பின் அவர் தொடர்ந்து, "நான் என் கடவுளை எவ்வளவு அதிகமாக நேசிக்க வேண்டும்! ஓ, உண்மையில் நான் அவரை எவ்வளவு குறைவாக நேசிக்கிறேன்! ஆனாலும், இது வரை அவரை நேசித்ததை விட எதிர்காலத்தில் அவரை அதிகமாக நேசிக்க நான் விரும்புகிறேன். நான் வயதிலும், பலத்திலும் அதிகரிப்பது போலவே, அவர் மீதுள்ள என் அன்பிலும் நான் வளர வேண்டும்" என்றார். அதுவும் அப்படியே ஆயிற்று. சூசையப்பரின் தேவ அன்பின் வளர்ச்சி, அவருடைய உடல் வளர்ச்சியோடு போட்டியிட்டு அதிகரித்தது. (தொடரும்)

33 நாள் தயாரிப்பு: ஜுலை 13-ல் தொடக்கம்

தேவமாதாவுக்கு முழு அர்ப்பணம் செய்ய அல்லது புதுப்பிக்க ஆயத்தமாக 33 நாள் தயாரிப்பு ஜுலை 13-ம் தேதி துவக்கி, ஆகஸ்ட் 14-ம் தேதியில் முடிவடைகிறது. இந்தத் தயாரிப்பை நல்ல விதமாகவும், தகுந்த பக்தியோடும் செய்து, தேவமாதாவின் பரலோக ஆரோபணத் திருநாளாகிய ஆகஸ்ட் 15 அன்று நமதன்னைக்கு உங்களை முழு அர்ப்பணம் செய்யும்படியாகக் கேட்டுக் கொள்கிறோம். இந்த அர்ப்பணத்தைச் செய்பவர்கள் மாதாவின் அப்போஸ்தலர்களாக ஆகிறார்கள் என்று **அர்ச். லூயிஸ் மரிய மோன்போர்ட்** கூறுகிறார்.

செப்டம்பர் 8: தேவமாதாவின் பிறந்தநாள் பரிசாக நாம் என்ன கொடுக்கப் போகிறோம்?



நம் இல்லங்களிலும், அலுவலகங்களிலும் உறவினர்கள், நண்பர்களின் பிறந்த நாட்களை சந்தோஷமாகக் கொண்டாடுகிறோம். கேக் வெட்டுவதில் தொடங்கி, பெரிய விருந்து வரை தாராளமாகச் செலவு செய்து, ஒருவரையொருவர் மகிழ்விக்கிறோம். பிறந்த நாள் காண்பவருக்குப் பரிசுகள் தந்து மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறோம். உலக நடப்பு முறை இது.

ஆனால் பரலோக பூலோக அரசியும், கடவுளின் அன்னையும், சம்மனசுக்களின் இராக்கினியும், ஜென்மப் பாவமின்றி உற்பவித்த நம் அன்னையுமான மாமரியின் பிறந்த நாள் விழாவிற்கு நாம் என்ன பரிசு கொடுக்கப் போகிறோம். பின்வருபவை தேவ அன்னை நம்மிடம் பிரியமுடன் எதிர்பார்ப்பவையாகும்:

நாம் விலக்க வேண்டியவை

1. நம் பாவங்களை விட்டு விலகப் பிரதிக்கினை செய்து, அதற்காக இடைவிடாமல் முயற்சி செய்தல்;
2. நம்மிடமுள்ள சில விசேஷ துர்க்குணங்களை (குறிப்பாக, கோபம், பொறாமை, பிறர்சிநேமின்மை, சரீர இச்சை, பழிவாங்குதல் போன்ற) துர்க்குணங்களை விட்டு விலகப் போராடுதல்; தன்னைத்தானே இவ்வுலகில் மாசற்றவனாகக் காத்துக்கொள்ளுதல்;
3. சாவான பாவங்களையும், பாவ சந்தர்ப்பங்களையும் அடியோடு விலக்கப் போராடுதல்; (சாவான பாவம் என்பது கனமான காரியத்தில் கடவுளின் கட்டளையை முழு அறிவோடும், முழு மன சம்மதத்தோடும் மீறுவது.)
4. அற்பப் பாவங்களையும் விலக்க முயலுதல். (அற்பப் பாவம் என்பது அற்பக் காரியத்தில், கடவுளின் கட்டளையைப் போதிய அறிவும், முழு மனச் சம்மதமும் இன்றி மீறுவது.)
5. குற்றங்குறைகளைத் தவிர்த்தல்;
6. பிறருடைய நற்பெயர், குடும்ப சமாதானம் ஆகியவற்றைக் கெடுத்தல், பிறருடைய மகிழ்ச்சியைக் கண்டு காய்மகாரப்படுதல், பிறர்சிநேகமின்றி, பகைமை பாராட்டுதல், நமக்குத் தீமை செய்தவர்களை மன்னிக்க மனமின்றி இருத்தல், பிறர் செய்த நன்மைகளுக்கு நன்றியற்றவர்களாக இருத்தல் ஆகியவற்றை எதிர்த்துப் போராடுதல்.
7. ஜெபம், தவம், பரித்தியாகம், ஒறுத்தல் ஆகியவற்றை அசட்டை செய்தல், உலகப் போக்கில் இன்பங்களை மட்டும் தேடுபவர்களாக வாழுதல் போன்றவற்றை எதிர்த்துப் போராடுதல்.

நாம் செய்ய வேண்டியவை

1. ஞாயிறு, கடன் திருநாட்களில் முழுப் பூசை தவறாமல் காணுதல்;
2. அடிக்கடி (இரண்டு வாரத்திற்கு ஒரு முறையாவது) நல்ல பாவசங்கீர்த்தனம் செய்தல்;

3. தினமும் குறைந்த பட்சம் 53 மணி ஜெபமாலையும், கூடுமானால் முழு ஜெபமாலையும் ஜெபித்தல், குடும்ப ஜெபமாலைக்கு முக்கியத்துவம் தருதல்;

4. சேசுவின் திரு இருதய ஸ்தாபகம், அனுதின குடும்ப ஜெபம், குழந்தைகளுக்கு நன்மாதிரிகை, அவர்களுக்கு நல்ல கத்தோலிக்க ஞான உபதேசப் பயிற்சியளித்தல் ஆகியவற்றின் மூலம் குடும்ப ஒற்றுமையைப் பாதுகாத்து, ஒருவருக்கொருவர் சமாதானத்தோடும், உள்ளன்போடும் வாழுதல்;

5. குடும்ப உறுப்பினர்களும், துறவறத்தில் உள்ளவர்களும் அவரவர் அந்தஸ்துக்கு ஏற்றபடி தேவ அன்னைக்குப் பிரியமான முறையில் வாழுதல்;

6. தங்கள் அந்தஸ்திற்கு ஏற்றபடி பரிசுத்த கற்பைக் காத்துக்கொள்ளுதல்; இதைச் சாதித்துக் கொள்ளும்படி, கற்புக்கு எதிரான இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் ஆபத்துக்களை முடிந்த வரை தவிர்த்தல்; குறிப்பாகக் கண்ணடக்கத்தைப் பயிற்சி செய்தல்;

7. துறவறத்தார் தங்கள் அந்தஸ்துக்கு ஏற்றபடி துறவறக் கடமைகளையும், சபை ஒழுங்கு களையும் அனுசரித்தல்; தங்கள் கற்பு, கீழ்ப்படிதல், தரித்திர வார்த்தைப்பாடுகளுக்குப் பிரமாணிக்கமாக இருத்தல்;

8. ஆன்மாக்களுக்குப் பொறுப்புள்ள குருக்கள் தங்கள் மந்தையின் ஆத்தும இரட்சணிய அலுவலில் கண்ணுங்கருத்துமாக இருத்தல், சுய பரித்தியாகங்கள் செய்து, இதற்காகக் கடுமையாக உழைத்தல்;

9. கார்மெல் உத்தரியம் அணிந்து, அதற்குரிய கடமைகளை நிறைவேற்றுதல் (மந்திரமாலை ஜெபித்தல், புதன் கிழமை சுத்தபோசனம் அனுசரித்தல் ஆகியவை);

10. 33 நாள் தயாரிப்பு செய்து, தேவ அன்னை வழியாக சேசுவுக்குத் தன்னை முழுவதும் கையளித்தல்;

11. சேசு மரியாயின் திரு இருதயங்களை நேசித்து, அவர்களுக்கு எதிராகச் செய்யப்படும் நிந்தை, துரோகம், அலட்சியத்திற்குப் பரிகாரமாக ஜெபம், தவம், ஒறுத்தல், பரித்தியாகம் செய்து அவர்களுக்கு ஆறுதல் அளித்தல்.

12. கடவுள் தங்களுக்கு அனுப்பும் துன்பங்களை அமைந்த மனதோடு ஏற்றுத் தாங்கிக்கொண்டு, தங்கள் பாவங்களுக்கும், மரியாயின் மாசற்ற இருதயத்திற்கு எதிரான பாவங்களுக்குப் பரிகாரமாக அவற்றை ஒப்புக்கொடுத்தல்;

13. பாவிகள் மனந்திரும்ப ஜெபித்தல்;

14. தங்களுக்கு வழங்கப்பட்டுள்ள செல்வம், ஞானம், அறிவு ஆகியவற்றைக் கொண்டு ஏழை களுக்கும், வேத காரியங்கள் பற்றிய அறியாமையில் இருப்பவர்களுக்கும் உதவி செய்தல்.

இவற்றைச் செய்வதன் மூலம், தேவ அன்னைக்கு மிகப் பிரியமான ஞான மலர்ச் செண்டை நாம் அவர்களுக்குப் பிறந்த நாள் பரிசாக அளிக்கிறோம். “மனுமக்களோடு இருப்பதையும், அவர்கள் இரட்சிக்கப்படுவதைக் கண்டு ஆனந்தங்கொள்வதையும்” விரும்புகிற நம் திவ்ய அன்னை இதனால் மிகுந்த மகிழ்ச்சியடைவார்கள். ஆன்மாக்கள் இரட்சிக்கப்படும், உலகம் சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளும், திருச்சபை தனது பாரம்பரிய மகிமைக்குத் திரும்பி வரும். பரலோகத்தில் உங்கள் சம்பாவனை மிகுதியாகும்.

மரியாயே வாழ்க!



மாதாவின் சூசை அச்சக புத்தக டிப்போவில் கிடைக்கும் ஞானப் புத்தகங்கள்



Cell: 94876 09983 Landline: 0461 2361989

		விலை ரூ.	தபாலில் விலை ரூ.
1	பாரம்பரிய திருக்குடும்ப பக்திமாலை	220.00	
2	உலகின் இறுதிக் காலங்கள்	125.00	
3	திருப்பாடுகளின் வரலாறு	150.00	
4	அனுதின ஜெபப் புத்தகம்	60.00	
5	திருப்பாடுகளின் தியானம்	90.00	
6	அறிவோம் பத்துக் கட்டளைகள்	100.00	
7	மலைமேல் பிரசங்கம்	65.00	
8	அறிவோம் அப்போஸ்தலர்களை: அர்ச். பிலவேந்திரர்	90.00	
9	ஞான உபதேசக் கோர்வை (3 பாகங்கள் அடங்கியது)	325.00	
10	மன்ரேசா (அர்ச். இஞ்ஞாசியாரின் தியானப் பிரசங்கங்களின் தொகுப்பு	125.00	
11	கிறீஸ்துநாதர் அநுசாரம்	250.00	
12	மரியாயின் மீது உண்மை பக்தி	125.00	
13	பாத்திமா காட்சிகள்	125.00	
14	பாவசங்கீர்த்தனத்தின் இரகசியம்		
15	சேசுவின் திருநாமத்தின் அதிசயங்கள்		
16	கற்பு என் பொக்கிஷம்	60.00	
17	என்னைப்படி அல்லது வருத்தப்படு (உத்தரிக்கிற ஆன்மாக்கள் பற்றியது)	25.00	
18	ஞான உணர்த்துதல்		
19	Read Me or Rue It	60.00	
20	என்னைப் படிக்காவிட்டால் வருத்தப்படுவாய்	80.00	
21	கத்தோலிக்க வேத சத்தியங்கள்	45.00	
22	இதுதான் பாத்திமா செய்தி, இதுவே பரிகார பக்தி	35.00	
23	ஞான சரீரம்	35.00	
24	சலேத் இரகசியம்	35.00	
25	மரியாயின் இரகசியம்		
26	தேவ இரகசிய ரோஜா மாதா காட்சிகள்		
27	The Penny Catechism	35.00	
28	அமலோற்பவ மாமரியின் போரணி		
29	அன்னையை நேசிக்கப் பன்னிரு படிகள்		
30	மரியாயின் மாசற்ற இருதய பரிகார பக்தி முயற்சிகள்	35.00	
31	முத்துக்குளித் துறையின் முதல் ஆயர் (வந். ரோச் ஆண்டகையின் வரலாறு)	30.00	
32	மோட்சம், நரகம், உத்தரிக்கிற ஸ்தலம்	35.00	
33	வியாகுல மாதா பக்தி	35.00	
34	தலை வெள்ளி, முதல் சனி பக்தியும், ஜெபமாலையும் அனுசரிக்கும் முறை	25.00	
35	உத்தரிக்கிற ஸ்தலத்துக்கு அனுதின யாத்திரை	15.00	
36	காவல் சம்மனசானவர்		
37	சிலுவைப் பாதை	15.00	
38	பரிசுத்த ஆவி ஜெபம்	6.00	
39	சேசுவின் திரு இருதய மந்திரமாலை	6.00	
40	தேவமாதாவின் மந்திரமாலை	10.00	
41	அர்ச். சூசையப்பர் பக்தி மாலை	15.00	
42	அர்ச். சூசையப்பர் மகத்துவங்கள்	60.00	
43	ஆதித் திருச்சபையின் பத்து வேத கலாபனைகள்		
44	திருச்சபையின் கட்டளைகள் (சிறிய விளக்கத்துடன்)		
45	சேசுவின் இரக்க பக்தி	10.00	
46	அர்ச். பிலோமினம்மாள் ஜெபப் புத்தகம்		
47	தேவ அழைத்தல்கள்	35.00	
48	சின்னக் குறிப்பிடம்	10.00	

		விலை ரூ.	தபாலில் விலை ரூ.
49	அன்பிரவு (பரிகாரத் திருமணி ஜெபப் புத்தகம்)	25.00	
50	மனச் செபம் ஒரு விளக்கம்	35.00	
51	புதுநன்மைப் புனிதை (முத்திப்பேறு பெற்ற இமெல்டா வரலாறு)	70.00	
52	பரலோக எச்சரிப்பு (2 புத்தகங்களின் தொகுப்பு -Fr. அந்தோனி சேவியர் தொகுத்து எழுதியது	60.00	
53	ஜெபமாலையின் இரகசியம் (அர்ச். லூயிஸ் மோன்போர்ட் எழுதியது)	100.00	
54	மரியாயின் மாசற்ற இருதய வெற்றியின் உதயம்	35.00	
55	33 நாள் தயாரிப்பு: மாதாவுக்கு முழு அர்ப்பணம் செய்யும் முறை (தியானங்களுடன்)	80.00	
56	இறுதிக் கால யுகம்	100.00	
57	அர்ச். பத்தாம் பத்திநாதர் வாழ்க்கை வரலாறு	100.00	
58	புதுமைப் புனிதர் தந்தை பியோ	200.00	
59	வேத விளக்கம் (வீரமாமுனிவர் (சங்.ஜோசப் பெஸ்கி, சே.ச.) எழுதியது	150.00	
60	அன்பின் அரசர்	150.00	
61	நரகம்	60.00	
62	அர்ச். ரீத்தம்மாளின் ஜீவிய சரித்திரம்	13.00	
63	அர்ச். சிலுவை அருளப்பர் வாழ்க்கை வரலாறு	80.00	
64	நரக சத்தியம்	70.00	
65	தேவமாதாவின் பிரார்த்தனை விளக்கம்	150.00	
66	மரியாயின் மகிமைகள்	170.00	
67	புதிய நட்சத்திரம் பிலோமினா	70.00	
68	அர்ச். பாஸி மரிய மதலேனாள்	85.00	
69	அர்ச். ஜெர்த்ரூத்தம்மாள்	45.00	
70	ஜெபமாலை ஜெபிப்பது எப்படி?	10.00	
71	A Brief History of St. Mary Magdalene de Pazzi, Carmelite and Mystic	50.00	
72	புனித அவிலா தெரேசம்மாள் சரித்திரம் - பாகம் 1	160.00	பாகம் 2:ரூ.250
73	கடவுள் மனிதனின் காவியம் (முதல் பாகம்)	350.00	
74	கடவுள் மனிதனின் காவியம் (இரண்டாம் பாகம்)	350.00	
75	கடவுள் மனிதனின் காவியம் (மூன்றாம் பாகம்)	550.00	
76	கடவுள் மனிதனின் காவியம் (நான்காம் பாகம்)	350.00	
77	கடவுள் மனிதனின் காவியம் (ஐந்தாம் பாகம்)		
78	கடவுள் மனிதனின் காவியம் (ஆறாம் பாகம்)	350.00	
79	கடவுள் மனிதனின் காவியம் (ஏழாம் பாகம்)	350.00	
80	கடவுள் மனிதனின் காவியம் (எட்டாம் பாகம்)		
81	கடவுள் மனிதனின் காவியம் (ஒன்பதாம் பாகம்)		
82	கடவுள் மனிதனின் காவியம் (பத்தாம் பாகம்)	550.00	
83	புதிய ஏற்பாடு (வுல்காத்)	500.00	
84	மௌனப் புன்னகை (அர்ச். குழந்தை தெரேசம்மாள்)	170.00	
85	சேசுநாதரின் திவ்ய மாதிரிகை (புதிய புத்தகம்)	90.00	

அன்பான வாசகர்களின் கவனத்திற்கு

1. மாதா பரிகார மலர் ஆண்டு சந்தாவை இன்னும் புதுப்பிக்காதவர்கள் உடனே அதைப் புதுப்பித்து, நம் பத்திரிகை நல்ல முறையில் வெளிவர எங்களுக்கு உதவும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். வருட சந்தா ரூ. 150/- கூடுதல் தபால் செலவு ஆகிறது. நேயர்கள் உதவி செய்யும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். உங்கள் ஆன்ம சரீர நன்மைகளுக்காக தினமும் எங்கள் ஜெபங்களில் வேண்டிக்கொள்கிறோம். **உங்கள் மொபைல் எண்ணை அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.**
2. மாதா பரிகார மலர் சந்தா, காணிக்கை மற்றும் புத்தகங்களுக்கு மட்டும் **94876 09983 என்ற எண்ணுக்கு Google Pay செய்யும்படி கேட்டுக்கொள்கிறோம்.**

A/c Name: SOCIETY OF APOSTLES OF MARY
No. 31423199505 - IFS Code: SBIN 0008145
State Bank of India, Kanthasamypuram Branch, Tuticorin.

அனுப்ப வேண்டிய முகவரி

மாதா அப்போஸ்தலர்கள் சபை, ரோஸா மிஸ்திக்கா,
11/519 சகாயமாதா பட்டணம், 2-வது தெரு, வி.வி.டி. பள்ளி எதிரில், தூத்துக்குடி - 628 002.
போன் : 0461 2361989, அலைபேசி: 94876 09983. Email: tutirosamystica@gmail.com
சந்தா நன்கொடை செலுத்த: Google Pay: 94876 09983.
Website: www.apostlesofmary.in

நமது மாதா அப்போஸ்தலர்கள் சபைக்கு அனுப்பும் நன்கொடை மற்றும் காணிக்கைக்கு வரிச் சலுகை பெற்றுக்கொள்ள ரசீது (80G - AAJTS6976JF20215) பெற்றுக்கொள்ள முடியும்.

சேசு மரியாயில் அன்புள்ள பிள்ளைகளே, நண்பர்களே, உபகாரிகளே,

நமது உலக ஜெயராக்கினி மாதா ஆலய கட்டட வேலைகள் கடந்த ஏழு ஆண்டுகளாக நடந்து வருகின்றன. சேசுவின் திருஇருதயத்திற்கும் (திவ்ய நற்கருணைக்கும்) மேலும், தேவ மாதா பாத்திமாவில் கேட்டுக் கொண்டபடி மரியாயின் மாசற்ற இருதய பரிகார பக்திக்கென்றும் இந்த ஆலயத்தை மிகுந்த முயற்சியுடன் உபகாரிகளின் உதவியினால் கட்டி வருகிறோம். தேவையான உதவிகள் கிடைக்காமையால் இக்கட்டட வேலைகள் இன்னும் முடியவில்லை. நமது உலக ஜெயராக்கினி மாதா ஆலயத்தை முழுமையாக கட்டி முடிக்க கீழ்க்கண்ட வகைகள் தேவைப்படுகிறது.

01.	பீடத்தின் மேல் (Center) டவர் கான்கிரீட் & சென்ட்ரிங் கூலி	-	ரூ.	**9,00,000.00**
02.	ஆலயத்தின் உள்பக்கம் & வெளிப்பக்கம் பூசுவதற்கு பொருட்கள் (Finishing materials) & கூலி	-	ரூ.	**12,50,000.00**
03.	கூரை ஓடு பதிக்கப் பொருட்கள் & லேபர் கூலி	-	ரூ.	**7,00,000.00**
04.	ஆலயத்தின் முன் கோபுரம் (Front Tower) கட்டுவதற்கு பொருட்கள் & (Finishing materials) லேபர் கூலி	-	ரூ.	**7,50,000.00**
05.	குருக்கள் தங்கும் இல்லத்திற்கு உள்பக்கம், வெளிப்பக்கம் பூசுவதற்கு பொருட்கள் (Finishing materials) & லேபர் கூலி	-	ரூ.	**1,05,000.00**
06.	வேங்கை மரம் நிலை & கதவு 9, ஜன்னல் 14, லேபர் & வுட் பாலிஷ்	-	ரூ.	**17,50,000.00**
07.	தரைக்கு வெள்ளை மார்பிள் & சுவரில் 12 அடி உயரம் வரை டைல்ஸ் & லேபர் கூலி	-	ரூ.	**24,00,000.00**
08.	எலெக்ட்ரிக்கல் சாமான்கள், (Fittings) விளக்குகள் & லேபர் கூலி	-	ரூ.	**6,00,000.00**
09.	ஆலயம் முழுவதற்கும் வர்ணம் பூச பொருட்கள் & லேபர் கூலி	-	ரூ.	**12,00,000.00**
10.	கண்ணாடி ஓவியங்கள் வேலை	-	ரூ.	**9,00,000,00**
11.	திவ்ய பலிபூசை நிறைவேற்ற முக்கிய பீடம் (White Marble Work)	-	ரூ.	**9,25,000.00**
12.	ஒரு பக்க பீடத்தின் (Side Altar) தேக்கு மர வேலை	-	ரூ.	**5,20,000.00**
13.	சுரூபங்கள்	-	ரூ.	**3,00,000.00**
	ஆலயம் கட்டி முடிக்கத் தேவையான மொத்தத் தொகை	-	ரூ.	**1,23,00,000.00**

இந்த ஆலயத்தைக் கட்டி முடிக்க மாதாவின் அன்புப் பிள்ளைகள் தங்களால் முடிந்த உதவியை வழங்குமாறு கேட்டுக் கொள்கிறோம். மேலும், இதற்காக ஜெபிக்கும்படியும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

வங்கி விபரம்

Account Name:

Society of Apostles of Mary

Account No. 121802000000473

IFS Code: IOBA0001218

Indian Overseas Bank,

Mappillaiyurani Branch, Thoothukudi.

G Pay: 94876 09983

SCAN & PAY

PPQR01.JJQMY@iob

Avail 80G for Tax Exemption - AAJTS6976JF20215

இவண்,
மாதா அப்போஸ்தலர்கள் சபை மற்றும்
மாதா அப்போஸ்தலர்கள்

Address:
மாதா அப்போஸ்தலர்கள் சபை,
(Society of Apostles of Mary)
11/519, சகாயமாதாபட்டணம், **2**வது தெரு,
தூத்துக்குடி – **628 002.** தொலைபேசி: 0461 2361989
அலைபேசி: 94876 09983, 94872 57479
E-mail: tutirosamystica@gmail.com

உலக ஜெயராக்கினி மாதா ஆலயம்



ஆலயத்தின் முழுத்தோற்றம்



கான்கிரீட் முடிந்த நிலையில் உள்ள ஆலயத்தின் தோற்றம்

முகவரி

மாதா அப்போஸ்தலர்கள் சபை,
(Society of Apostles of Mary)
11/519, சகாயமாதாபட்டணம்,
2வது தெரு, தூத்துக்குடி – 628 002.
தொலைபேசி: 0461 2361989
அலைபேசி: 94876 09983, 94872 57479
E-mail: tutirosamystica@gmail.com

SCAN & PAY

PPQR01.JJJQMY@iob

வங்கி விபரம்

Account Name:
Society of Apostles of Mary
Account No. 121802000000473
IFS Code: IOBA0001218
Indian Overseas Bank,
Mappillaiyurani Branch,
Thoothukudi.

Google Pay: 94876 09983

Avail 80G for Tax Exemption - AAJTS6976JF20215

முதல் சனி பக்தி முயற்சியின் பரிகாரக் கருத்துக்கள்



1. தேவமாதா ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்தார்கள் என்ற சத்தியத்தை மறுக்கும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக ... (ஜனவரி, ஜூலை)
2. தேவமாதா சர்வேசுரனுடைய தாய் என்ற சத்தியத்தை மறுக்கும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக ... (பிப்ரவரி, ஆகஸ்ட்)
3. தேவமாதா நித்திய கன்னிகை என்ற சத்தியத்தை மறுக்கும் நிந்தைக்குப் பரிகாரமாக ... (மார்ச், செப்டம்பர்)
4. தேவமாதாவினுடைய பக்தியை இளம் உள்ளங்களிலிருந்து அகற்றுகின்ற துரோகத்துக்குப் பரிகாரமாக ... (ஏப்ரல், அக்டோபர்)
5. தேவமாதாவின் பக்திப் பொருட்களை அவமதித்து அகற்றும் நிந்தைகளுக்குப் பரிகாரமாக ... (மே, நவம்பர்)
6. ஐந்து நிந்தைகளுக்கும் சேர்த்துப் பரிகாரமாக ... (ஜூன், டிசம்பர்)

மரியாயின் மாசற்ற இருதயத்திற்குப் பரிகாரம் செய்யும் கருத்தோடு முதல் சனிக்கிழமைகளில் **1.** பாவசங்கீர்த்தனம் செய்து, **2.** திவ்ய நன்மை உட்கொண்டு, **3.** 53 மணி ஜெபமாலை ஜெபித்து, **4.** ஜெபமாலையின் தேவ இரகசியங்களைத் தியானித்தபடி 15 நிமிடம் என்னோடு தங்கியிருப்பவர்களுக்கு, அவர்களது ஆத்தும இரட்சணியத்திற்கு அவசியமான சகல வரப்பிரசாதங்களையும் கொண்டு அவர்களின் மரண சமயத்தில் உதவுவதாக வாக்களிக்கிறேன்.

இதுவே முதல் சனி பக்தி முயற்சி அனுசரிக்கும் முறையாகும்.

MATHA PARIKARA MALAR
ROSA MYSTICA
(Opp. V.V.D. H. Sec. School)
SAHAYAMATHAPATTANAM
TUTICORIN - 628 002.
PH: 0461 - 2361989
Whatsapp & Gpay:
94876 09983
E-mail: tutirosamystica@gmail.com
Web:www.apostlesofmary.in

மாதா பரிகார மலர்
ரோஸா மிஸ்திக்கா
வி.வி.டி. மேல்நிலைப்பள்ளி எதிரில்,
சகாயமாதாபட்டணம்
தூத்துக்குடி மேலூர் போஸ்ட் – 628 002
போன்: 0461 – 2361989
அலைபேசி: 94876 09983

To

Printed, Published and owned by: S. Michael Joseph Kennedy , Managing Trustee cum Secretary of Society of Apostles of Mary & Keeper of Mathavin Susai Achagam (Printing Press), 11/519, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin District, Tamil Nadu.
Printed at: Mathavin Susai Achagam (Printing Press), C/o, Society of Apostles of Mary, D.No 11/510, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamil Nadu.
Published at: Society of Apostles of Mary, 11/510-1, Rosamystica 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamil Nadu.
Editor: Sammanasu Navis, C/o, Society of Apostles of Mary, 11/519, 2nd Street, Sahayamathapattanam, Melur (P.o), Tuticorin - 628 002. Tuticorin Dist., Tamilnadu.